தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உஎ	திருவள்ளுவர் யாண்டு கூகஅஉ கர—ஆனி 1951—ஜூன்	மலர் ௩

தஞ்சை மாவட்டத் தலைவர் பாராட்டு வாழ்த்து.

கர, வைகாசி, ௩௰, (13-6-51) ஆம் நாள், நம் சங்கம், நமது தஞ்சை மாவட்டத் தலைவர் உயர்திரு. தி. கா. சங்கர வடிவேற் பிள்ளை யவர்கள், B. A., I. A. S., சென்னை அரசாங்க நாட்டுப்புற நலப்பகுதி ஆட்சி அமைச்சராகத் தொண்டு செயப் புகுதல்பற்றி மகிழ்ச்சி தெரிவிப்பதாம் பாராட்டுக் கூட்டம் ஒன்று நடாத்தியது. அவர்கள் இன்னிசை முழக்கத்துடன் நகர மக்களால் சிறப்பாக வரவேற்கப்பெற்றுத் தமிழ்ப்பெரு மன்றம் புகுந்து சங்கத் தலைவர் அவர்களுடன் தலைமையிடத்து அமர்ந்த சிறப்பு பாராட்டற் குரியது, ஆட்சித் தலைவர்கள், புலவர்கள், நகரப் பெருந் திருவினராகிய பேரறிஞர்கள் பற் பலர் கூடி மகிழ்ந்தனர். தேவார, திருவாசகம் அருட்பாக்கள் முதலாயவை அவர்களது இருமருங்கும் இசைப் புலவர்களால் இனிது பாடப்பெற்றன. சங்கத் தொண்டர் கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் அவைத்தலைவர் அவர்களின் சங்கஉரிமை, புலமைச் சிறப்பு, ஆட்சித் திறமை, கடவுட் பற்று முதலியவைகளைக் குறித்து விளக்கி வரவேற்பு முன்னுரை கூறினர். பின்பு சங்கத்தின் பேரன்பரும், பெரும் புலவரும், திருவருட் செயலால் அதுபோது அங்குவந் துற்றோருமாகிய அண்ணமலை நகர்த் தமிழ்ப் பேராசிரியர். ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள், அவைத் தலைவரின் குலப்பெருமை, குலப்பெரியார், வழிவழிப் பெருமைகள், அவைத் தலைவரின் ஆட்சித் திறமைகள் முதலாயவை விரிக்கப் பெற்றிருந்த வரவேற்புச் செய்யுளை இன்னிசை,

விளக்கக் குறிப்புக்களுடன் படித்து அளித்தனர். பின்னர், தலைவரவர்கள் எழுந்து சங்கத்தின் பெருமைகள், தொண்டுகள், முன்னுரை கூறிய கவியரசரின் பெருமை, அவர் போன்ற சங்க அன்பரின் சிறப்புக்கள் முதலாயவற்றை விரித்து உரைத்து, தமது நன்றியைத் தெரிவித்தனர். பின்னர், சங்கத்து உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் திரு. S. திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள், மாவட்டத் தலைவரவர்கள் சங்கக் கலைமகள் விழாவைத் தொடங்கிவைத்து நிறைவேற்றியும், அடுத்து, சென்னை மாநில ஆட்சியாளர் தஞ்சைமா நகர்க்கு வந்த பொழுது அவர்களை நம் சங்கத்தில் எழுந்தருள அவர்கட்கு அளித்த வரவேற்பு விழாவை ஒப்புயர்வில்லதாகச் செய்தும், அண்மையில் பதினேழாம் நூற்றுண்டுப் புலவர்கள் பற்றிய சொற்பொழிவு வரிசையை தம் தலைமையில் தொடங்கி வைத்தும், இன்னும் பிறவாற்றுனும் சங்கச் சிறப்புக்கள் பலவற்றிலும் ஈடுபட்டு சிறப்பித்தும் வந்தமைக்காகவும், தஞ்சைமா வட்டத் தலைநகரிலிருந்து அவர்கள் சென்னை சென்றுலும் அங்கிருந்தபடியே அவர்கள் இனியும் ஈடு படுவதற்காகவும் நன்றியும் வணக்கமும் தெரிவித்தார்கள்.

* * * * *

புலவர் கல்லூரித் தேர்ச்சி.

இவ்வாண்டில் இக்கல்லூரியின் முடிவுநிலை வகுப்பில் யாவரும் தேர்ச்சியுற்றனர். பதின்மர் சென்றவர். அவருள் மூவர் இரண்டாம் வகுப்பு, ஏனையர் மூன்றும் வகுப்பு. முன்நிலை வகுப்பிலும் யாவரும் தேர்ச்சியுற்றனர். பதிமூவர் சென்றவர், அவருள் முதல் வகுப்பினர் மூவர், இரண்டாம் வகுப்பினர் ஐவர், ஏனையர் மூன்றும் வகுப்பினர். புகுமுக வகுப்பிற்குச் சென்றோர் பத்தொன்பதின்மருள் பதினைவர் தேர்ச்சியுற்றனர். மகிழ்ச்சிக்குரியன.

* * * * *

குறிப்பு.

தமிழ்ப்பொழில் வைகாசி மலரில் மூத்த பிள்ளையார் புகழ்மாலை நூலுக்கு மதிப்புரை எழுதியவர்கள் திருவாளர். **சாமி. வேலாயுதம் பிள்ளை**, B.A., L.T., அவர்கள் ஆவார்கள்.

* * * * *

ஆரூரரின்
அருள் வாழ்க்கையின் அளவு யாது ?

மா. சிவகுருநாத பிள்ளை,
தலைமை ஆசிரியர், சண்முகானந்த பாடசாலை,
சுந்தரப்பெருமான் கோயில்.

விஞ்ஞான அறிவுப் பெருக்கால் அரும் பெருஞ் செயல்களை வியத்தகு முறையில், மிக்க விரைவுடன், பொறி உதவி கொண்டு இக்கால மக்கள் செய்யினும் உடல் வலியில் முற்கால மக்களுக்குக் குறைந்தவரே ஆவர்.

மிக்க விரைவில் செல்லும் யாத்திரை வசதிகளை உடையது இக்காலம். ஆதலால் மிக்க அருகில் உள்ள இடங்களுக்குக்கூட கால்நடையாய்ச் செல்ல இக்கால மக்களில் பலர் மலைப்படைவதோடு, நடந்துசெல்வதைக் குறையாகவுங் கருதுகின்றனர். முற்காலத்தில் மிக்க கரடு முரடான பாதைகளில் தம் நீண்ட யாத்திரைகளில் பெருஞ் சுமைகளுடன் வெளிநாடுகளுக்கெல்லாம் செல்வரும் சென்று வந்துள்ளது போற்றத் தகுந்ததே யாகும்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய கண்ணப்பர் பிறந்த ஊர் பொத்தப்பி நாட்டு உடுப்பூர். இது சித்தூர் மாவட்டத்தில் இராசமபேட்டைக்கு அருகில் உடுக்கூர் * என இப்போது வழங்குகிறது, இதற்கும சீகாளத்தித் திருமலைக்கும் 40 கல் தூரம உள்ளது. முதன் முதல் கன்னி வேட்டைக்குக் காலையில் உடுப்பூரை விட்டுப் புறப்பட்ட 16 வயதுடைய கண்ணப்பர் பல விலங்கினங்களைக் கொன்று குவித்தபின்னரும் 40 கல் தூர கடந்தும் உச்சிவேளையில் (ஆறுமணி நேரத்திற்குள்) சீகாளத்தி மலையை வந்தடைந்துள்ளார். அதன் பின் உடன் வந்த நாணனும் காடனும் கண்ணப்பர் காளத்தியப்பரின் வயமானது கண்டு உடனே பசியுடன் உடுப்பூரை அன்றைய பொழுதில் அடைந்து நாகனிடம் தெரிவித்திருப்பதால் ஒரு பகலுக்குள் 80 கல்லுக்குமேல் நடந்தது உறுதியாதலின், முற்கால மக்களது விரைவு, ஆற்றல் முதலியன விளங்குகிறதல்லவா ?

---

* உயர்திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பதிப்பித்துள்ள 'கண்ணப்பநாயனார் புராண' விரிவுரையில் பக்கம் 243ல் நாயனாரின் ஊர் என்ற தலைப்பின்கீழ் பார்க்க.

சைவ, வைணவ அடியார்களுள் தலயாத்திரையை மேற்கொண்டவர்கள் பலர். அவர்களுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர், இவர்களது யாத்திரைகள் பெரியபுராணத்துள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவர்களது இறுதி வயது முறையே 16, 81, 18 என ஒரு தனிப்பாடல் குறிக்கின்றது.

18 வயதில் இறையடி எய்திய சுந்தரர் தடுத்தாட்கொள்ளப்பெற்ற பின், 6 பெரும் யாத்திரைகளையும் 5 சிறு யாத்திரைகளையுஞ் செய்து இருதிருமணங்களையும் முடித்துக்கொண்டு வாழ்ந்துள்ளார். அவ் யாத்திரைகள் ஆவன:—

1. திருவெண்ணெய் நல்லூரில் இருந்து திருவாரூர் வருகையும், பரவையாரை மணந்ததும். (பெரும் யாத்திரை—தடுத்தாட்கொண்ட புராணம், 73-123).

2. குண்டையூர், திருக்கோளிலி சென்று நென்மலைபெற்று மீண்டது. (சிறு யாத்திரை—ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 16-22).

3. திருநாட்டியத்தான்குடிக்குப் போய்க் கோட்புலியாரைக் கண்டு மீண்டது. (சிறு யாத்திரை— ஏயர்கோன் கலிக்காமர் புராணம் 31-44).

4. திருப்புகலூர்சென்று செங்கல்லைப் பொன்னுகப்பெற்று மீண்டது. (சிறு யாத்திரை—ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 46-54).

5. கொங்கு நாட்டுப் பேரூர்வரை சென்று மீண்டு திருமுதுகுன்றத்தில் பொன்பெற்று ஆற்றில் இட்டு வந்தது. (பெரும் யாத்திரை—ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம், 56-123).

6. தொண்டை நாட்டுப் பெரும் யாத்திரை. வடக்கே சீகாளத்தி வரை சென்று திரும்பி வழியில் திருஒற்றியூரில் சங்கிலியாரை மணந்து கண் இழந்து மீண்டது. (ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 142-302).

7. திருப்புன்கூர் சென்று ஏயர்கோன் கலிக்காமரை நட்புக் கொண்டு மீண்டது. (சிறு யாத்திரை—ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 395-407).

8. நாகைக்காரோணம் சென்று பரிசுகள் பெற்று மீண்டது. (சிறு யாத்திரை—கழறிற்றறிவார் (சேரமான்) புராணம் 63).

9. சேரமானுடன் பாண்டி நாட்டு யாத்திரையை மேற்கொண்டு மீண்டது. (பெரு யாத்திரை கழறிற்றறிவார் புராணம், 83-121).

10. சேரமானுடன் மலைநாடு சென்று பின் தாம் மட்டும் திருவாரூர் மீண்டது. (பெரு யாத்திரை கழறிற்றறிவார் புராணம் 129-172).

11. திருஅஞ்சைக்களம் சென்று அங்கிருந்து திருக்கயிலையை அடைந்தது. (பெரு யாத்திரை—வெள்ளானைச் சருக்கம், 32—41)

தடுத்தாட் கொள்ளப்பெற்ற திருமணம் நடந்தபொழுது சுந்தரர், 'காளை, ஆண்டகை, மடங்கலனையான்' என்றழைக்கப் படுதலால், பதினைந்தாண்டாவது நிறைந்திருக்க வேண்டும். அதன்பின் இரண்டு மூன்றாண்டுகளில் '16—18 க்குள்' இவரது திருமண வாழ்க்கையும் யாத்திரைகள் முதலியனவும் ஆகியிருக்க முடியுமா எனச் சிலர் ஐயுறக் கூடும். எனினும் கீழ்க் கண்ட சான்றுகள் இவ் ஐயத்தை நீக்க வல்லன வாகும்.

1. இறைவனது அருள் பெற்ற அடியவர்கள் இல்லற வாழ்க்கையின் இன்பங்களில் இருப்பினும் அதனுள் நம்முன் யாவரையும் போல் ஆழ்ந்து இருக்கமாட்டார்கள். இரு திருமணங்களைப் புரிந்துகொண்ட இவர் தம் தேவியர்களுடன் இல்லறத்துள் இணைபிரியாது இராது, அடிக்கடி யாத்திரையை மேற்கொண்டு, 'வேண்டிக் கொள்வேன் தவநெறியே' (திருத்துறையூர்ப் பதிகம்) என்று பல விடங்களில் கூறியதன்றி, தம் வாழ்க்கையை அறுத்திடவேண்டும் என்னும் குறிப்புடன் 'தலைக்குத் தலைமாலை' எனத் தொடங்கும் திருஅஞ்சைக் களப் பதிகத்துள் பாடியுள்ளார் என்பது '.........அவனியில் விழுந்தெழுந் தலைப்புறு மனை வாழ்க்கை சரிய வேதலைக்குத் தலைமாலை என்றெடுத் தனர் தமிழ் மாலை' (வெள்ளானைச் சருக்கம், 29) என விளக்கப் பட்டுள்ளது.

2. மேலும், இவர் இறைவனையே தோழமையாகக்கொண்டு செயற் கருஞ் செயல்கள் பலவற்றைச் செய்தவர் ஆதலின் எச்

செயலையும் குறுகிய கால அளவில் முடிக்க வல்லவர் என்பதை எவ்வாறு மறுக்க முடியும்?

3. இவரது வாழ் நாளில் இவர் மேற்கொண்ட யாத்திரைகளே பெரு நிகழ்ச்சிக்குள்ளானவை. இவரது பதினொரு யாத்திரைகளில் முதல் யாத்திரையைத் தவிர்த்து ஏனையவற்றைத் திருவாரூரை இருப்பிடமாகக் கொண்டு இவர் சுற்றி வந்துள்ளார். தம் பிறந்த ஊராகிய திருநாவலூரிலிருந்து முதல் யாத்திரையைத் தொடங்கிய பின் 6 ஆவது தொண்டை நாட்டு யாத்திரையில் ஒருமுறை தாம் மறுபடியும் அவ் வூர் சென்றுள்ளார் (ஏயர்கோன் புராணம், *168—171*) என்பதும் குறிப்பிடத் தக்கது.

4. நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் பல்லக்கிலும், நாவுக்கரையர் நடையிலும் யாத்திரை செய்துள்ளனர். இவர் இளமையில் அரசராகிய நரசிங்க முனையரையரால் வளர்க்கப் பட்டவராதலால், அரசர்களுக்குரிய குதிரை யேற்றம், யானை யேற்றம் முதலிய பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டும். இவற்றிற் கேற்பவே இவருக்கு எட்டாவது நாகைக்காரோண யாத்திரையில் குதிரை முதலிய பரிசுகளும், இறுதியில் திருக் கயிலைக்குச் செல்ல யானையும் வந்தன. இவ்விதப் பயிற்சி யற்றோர்க்கு இவைகள் பொருந்தா. *9*-ஆவது பாண்டி நாட்டு யாத்திரையில் அரசராகிய சேரமான் குதிரையில் செல்லும் போது இவரும் அதற்கு முன் நாகையில் கிடைத்த குதிரையில் சென்றிருக்க வேண்டும். குதிரை யாத்திரை விரைவில் செல்ல வல்லது. ஆறுவது யாத்திரையில் திரு ஒற்றியூரில் கண் இழந்து வந்தமையைத் தவிர்த்து மற்ற யாத்திரைகளைப் பெரும் பாலும் குதிரை முதலிய ஊர்திகளில் தான் சென்றிருப்பார். அரச கோலத்துடனும் திருமணக் கோலத்துடனும் விளங்கியவர் ஆதலின், பெரு யாத்திரைகளை நடந்து செய்திருக்க மாட்டார்.

5. என்றாலும் நடந்து செல்வதற்கும் மிக்க உடல் வலி உள்ளவர். 'உள்ளக் களிப்பினோடும் வென்றி அடல் விடை போல்.........' (தடுத்தாட் கொண்ட புராணம், *129*) என இவரது உடல் வலி கூறப்பட்டுள்ளது. இன்னும் இவரே தன்னை,

'மல்லின் மல்கு திரள்தோ ளூரன்' (*7-18-10* திருக்கழுக் குன்றப் பதிகம்)

'மலைமலிந்த தோளூரன்' (*7-30-10*)

'திரு மருவும் திரள் தோளான்' (*7-73-11*)

'மதயானை நாவலாரூரன்' (7-40-11)
எனத் தம் பதிகத்துள் தம் உடல் வலி பற்றிக் கூறுகின்றார்.

6. ஆறுவது தொண்டை நாட்டு யாத்திரையில் திருக் கழுக்குன்றத்திலிருந்து அடுத்துள்ள திருக்கச்சூர் ஆலக் கோயிலை இவர் அடைந்தார். ஆனால் இவரது பரிசனங்கள் வரக் காலந் தாழ்த்தமையால் இவருக்குப் பசி வர அதனை இறைவன் பிச்சை யேற்று வந்து தீர்த்துள்ளார். (ஏ. பு. 175-180). ஆதலால் இவர் தம் பரிசனங்களுக்கு முன் குறிப் பிட்ட இடங்களுக்குச் சென்றுள்ளார் எனின அவர்களை விட நடையில் அல்லது வேறு வகையில் எவ்வளவு விரைந்து செல் பவர் என்பது தெளிவாகின்ற தலலவா?

7. மேலும், இவர் யாத்திரையின் இடையில் சம்பந்தர் அப்பரைப் போன்று வழியில் உள்ள தலங்கள் (ஆரூர், ஒற்றி யூர் தவிர) பலவற்றையும் தவறாது தரிசித்துத் தங்கிப் போன குறிப்புகள் இல்லை. தாம் குறித்துச் செல்லும் தலங்களைத் தவிர்த்து இடையில் உள்ள சில தலங்களைத தரிசியாமலும் சென்றுள்ளார். அவ்வாறு செல்லும்போதுகூட இறைவன் இவரைப் பலவிதங்களில் வழி மறித்து அதாவது திருவாலம் பொழிலில் இருந்து திருமழபாடிக்கும் (ஏயர்கோன் புராணம், 71-74), திருமுதுகுன்றத்திற்குச் செல்லும் போது திருக் கூடலை யாற்றூருக்கும் (ஏயர்கோன் புராணம், 101-104), பத்தாம் யாத்திரையில் மலை நாட்டிலிருந்து திருவாரூர் திரும்புகையில் திருமுருகன் பூண்டி (கழறிற்றறிவார் புராணம், 164-171) ஆகிய இத் தலங்களுக்கும் வலிய அழைத்துச் சென்று பாடச் செய் துள்ளார்.

8. இவர் தாம் குறித்துச் சென்ற தலங்களில் தம் முக்கிய குறிக்கோள் நிறைவேறிய பின் உடன் தம் இருப்பிட மாகிய திருவாரூரினை நினைந்து விரைவில் திரும்பியுள்ளார். மேலே குறிப்பிட்டுள்ள 2, 3, 4, 7, 8 யாத்திரைகளை நோக்க இது நன்கு விளங்கும்.

திருஒற்றியூரில் ஆரூரின் வசந்த விழாவின் நினைவு வர (ஏயர்கோன் புராணம், 270) உடன் ஆரூரை நினைந்து '......எங் ஙனம் நான் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே' எனப் பாடி, சங்கிலிக்குச் செய்த சத்தியத்தையும் *மறந்து, புறப் பட்டுக் கண்களை இழக்கின்றார். பின் இவ்வாறு வரும் போது

---

* 'காரிகை காரணமாக ஆரூரை மறத்தற் கரியானை' (7-53-11) சுந்தரர் தேவாரம் திருவாரூர் பதிகம்.

இடையில் காஞ்சியில் 'திருவாரூர்புக்கு எந்தை பிரானுரை என்று கொல் எய்துவதே'. எனப் பாடி நினைந் துருகுகின்றார். பின் சேரமானுடன் திருஅஞ்சைக் களத்தில் இருக்கும்போது '.........ஆரூரானை மறக்கலும் ஆமே.' எனப் பாடி உடன் ஆரூருக்குப் புறப்படுகின்றார். ஆதலால், இவர் திருவாரூர் நினைவால் வெளியில் செல்லும தலங்களில் அதிகமாய்த் தங்காது விரைந்து வந்துள்ளார் என்பது தெரிகிறது.

9. இறுதியாய்க் கூறுமிடத்து இவர் யாத்திரையில் மிக்க விரைவு கொண்டு சென்றவர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு மிகச் சிறந்ததாகக் விளங்குகிறது. இவர் சிதம்பரத்தை தரிசித்த தடவைகள் மூன்று :—

(1) திருவெண்ணெய்நல்லூரில் இருந்து திருவாரூருக்கு முதன் முதல் வரும்போது (தடுத்தாட் கொண்ட புராணம், 102-109).

(2) ஐந்தாம் யாத்திரையில் திருமுதுகுன்றத்தில் இருந்து திரும்பும்போது (ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 111-116).

(3) ஆறும் யாத்திரையில் தொண்டை நாட்டை நோக்கிச் செல்லும்போது குருகாவூரில் பசி நீங்கப்பெற்ற பின் (ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 155-163).

இம் மூன்று தடவைகளில் ஏதோ ஒரு தடவையில் இவர் சிதம்பரத்தைத் தரிசித்துக்கொண்டிருந்தபோது சேரமானுக்குத் தம் நித்திய பூசையில் வழக்கம் போல் கேட்கப் பெறும் திருச் சிற்றம்பலவரின் திருச் சிலம் பொலி கேட்கப் பெறவில்லை. பின் திருச்சிற்றம்பலவரால்

'.........வன் றொண் டன் ஒன்று முணர்வா னமைப் போற்றி உரைசேர் பதிகம் பாடுதலா னின்று கேட்டு வரத் தாழ்த்தோம்.........' என விண் மொழியால் உணர்ந்தார். பின் உடன் தம் பரிசனங்களுடன் புறப்பட்டார். முதலில் சிதம்பரத்திற்கு வந்து ஆட லரசனைத் தரிசித்துப் பொன் வண்ணத்தந்தாதி பாடி அங்கிருந்து பின்னர் திருவாரூர் வந்து சுந்தரரைக் கண்டு நட்புக் கொண்டார்.

89 ஆம் பக்கம் பார்க்க.

அறிஞர் ஷா

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

மக்கள் நாகரீகத்தை அறிவாற்றலால் மாண்புற வளர்க்கும் பெற்றிமை வாய்ந்தவரே ஒரு நாட்டின் பெருந் தகையாளராவர். மக்கள் வாழ்வின் வடிவைச் சொற் புலமையால் அமைத்து உலகிற்கே பயனுறும்வண்ணம் அறிவையூட்டிப் பேருதவி செய்த சமுதாய சிற்பிகள் வள்ளுவர், ஹோமர், தாந்தே, காளிதாஸர், ஷேக்ஸ்பியர் முதலியோர் உலக மக்களின் மதிப்பிற் குரியராவர். இத் தகைய நாகரீகத்தின் சிற்பிகள் யாவரும் பெறற் கரிய சீருலாவிய சிறப்பினைத் தம் காலத்திலே பெற்று வாழ்விற் கொளியாய் விளங்கி ஏறத்தாழ ஒரு நூற்றாண்டளவு நம்மிடையே நிறைபட வாழ்ந்து மகிழ்ந்து 1950-ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்து இரண்டாம் நாளில் இவ் வுலகை நீத்த உள்ளறிவாளர் 'ஷா' என்பவராவர். இவர் தாம், மும் மொழிக் கலையிலும் சொற் புலமையால் தம தாற்றலைப் பயன் படுத்தி மக்கள் நாகரீகத்தை தம் கருத்தின் வழி பண் படுத்தி நகைச் சுவைக்கு அளவு கோல் தாமே என உலக அரங்கில் மனித இயல்புக் குரிய பொது நல இயக்கத்தைப் பரப்பி வெற்றி பெறச் செய்தவர்.

ஷா, அயர்லாந்தின் தலைநகராகிய டப்ளனில் 1856-ஆம் ஆண்டு ஜூலை மாதத்து 26-ஆம் நாளில் பிறந்தார். தந்தை பெயர், ஜார்ஜ் கார் ஷா. தாய், லுசிண்டா எலிசபெத் ஷா எனும் நாணுடுத்த நல்லாள். தந்தையார் காத்த மனையறத்திற்கு இன்பக் கனியாய் அமைந்த கடைக் குட்டிப் பிள்ளை ஷா. தாய் இசை வல்லுநர். அவள், உயிர் விரும்பும் பொருளாகிய இசையினில் ஷாவுக்கு ஓர் அவாவினை உண்டாக்கினாள். அதனால், இவர் தம் இள வாழ்வு இசைப் பற்றில் ஊறிப் போனதால், எம் மனத்தையும் தம் கருத்தோடு ஒன்றுபட்டுத் தம் மய மாக்கவல்ல ஆற்றலைப் பெற்றார்,

இளமையில் பெற்ற இசை இன்பம் ஷாவுக்கு முதுமை வரை சாதி சமய வேற்றுமை பாராட்டாது பொது

மக்களிடையே பல துறைகளிலும் ஈடுபடும் வாய்ப்பினை நுகரச்செய்தது. உயிர்க்குயிரான இன்பமாகிய இசை நலமே, இவரது நெடிய அனுபவத்தின் கனியாய இலக்கியத்தின்-கண் நகைச் சுவையாகத் திகழ்ந்தது. இத் தகைய அடிப்படையில் விளைந்த உண்மை நகைச் சுவை, சற்றுக் கூர்ந்து சிந்திக்கின், மனித வியல்போ டொட்டிய உலகியல்பின் விளக்கமாகும். இஃது இயற்கை யுண்மையைக் கொண்டு இயலாற்றலுடன் விளங்கும் பெற்றியினை இயல் பாகக் கொண்டுள்ளதினான், ஷா, எளிதாக நகைச் சுவை நாடகக் காட்சிகளைப் படைத்து, போலிநடைக்கும், மதவெறிப் புரட்டுக்கும் உள்ளீடில்லாத வாழ்வியலின் ஊழல்களுக்கும் நகைச் சவுக்குக் கொடுத்தார். இத் தகைய நகைச் சுவை இனிய கவிதையுடன் கால நன்மைக் கேற்ப, தவழ்ந்து செல்வதினான், நகைச் சுவை விரவும் தனது நாடகங்களிலெல்லாம் வெற்றி பெற்றார் ஷா. இவரது நாடகங்களில் ததும்பும் உணர்ச்சியின் ஆற்றலும், குலுங்கும் நகை முறுவலும் கைகோத்து உலாவுதலான், எந்தப் பகுதியிலும் மனம் படியுங் காலை, மனக் கண் முன், உலக நாடகத்தின் விநோதம் அவர் கலைத் திறம் கொண்டு காட்சி யளிக்கின்றதை உணரலாம். இஃதே மக்களுக்கு புதிய கிளர்ச்சியினை யளிக்கும் விருந்தாக விளங்கியது: மற்றும் வாழ்க்கைத் துயரில் வருந்தினார்க்கு ஆறுதலும் அளித்தது. எனவே, இயற்கை இசை இன்ப வெள்ளம் உலகளாவியது போன்று, தம் தாய் வழியாகப் பெற்ற இசையினின்று வளரும் இவரது நகைச் சுவை நாடகங்கள் அனைவருக்கும் பொதுவாகப் பயன் பட நிற்கும் நிலையில் உலகளாவிய செழுமையினை யெய்தியது புலனாகு மென்க.

வாழ்வின் நிறைவிற்குரிய இசை யின்பத்தை இளமையிலே வாய்க்கப் பெற்ற ஷாவுக்கு முறையான பள்ளிப் படிப்பு நிறை மாண்புடன் ஒளிரவில்லையாதலான், எண்ணெழுத்து மற்றும் கற்றுக் கொண்டு ஷா பள்ளியின் கட்டுப்பாட்டை வெறுத்து வாளாயிருக்கும் சுகத்தினில் திளைத்திருக்கத் தலைப்பட்டார். ஆசிரிய ரில்லாமல் ஷெல்லி (Shelley) டிக்கன்ஸ் (Dickens) ஸ்காட் (Scott) ஷேக்ஸ்பியர் (Shakespeare) முதலியோர்களது நூல்களைப் படித்து இன்பம் பருகித் திளைத்தார். ஷேக்ஸ்பியர் பால் தனது நாட்டின் வரலாற்றை அறிந்து அவரியற்றிய மாக்பெத் (Macbeth) என்ற துன்பியல்

நாடகத்தில் தோன்றும் மக்டப் (Macduff) என்பார் தன் முன்னோரென உணர்ந்து கொண்டார். உண்டு உடுக்கத் தட்டில்லாதே தன் அறிவை வளம் படுத்திக் கொண்டு குறுக்கெழுத்தினைப் பயின்றும் புகைப் பட மெடுப்பதில் ஆர்வமுங் கொண்டும் ஏனோ தானோவென சில்லாண்டுகள் வரை காலங் கழித்தனர். சாமுவேல் பட்ளர் (Samuel Butler) ஹென்ரி பெர்க்சன் (Henry Bergson) என்ற ஆழ்ந்த அறிஞர்களது நூல்களைக் கசடறக் கற்று அன்னாரது அறி வுரைகளை சிந்தித் துணரத் தலைப்பட்டார். இந் நூல்கள் வழி வாழ்வியலின் இயல்பை அறிந்த ஞான்று, உயர்ந்த உண்மையினை நாடியது இவரது உள்ளம். இவரது பேச்சு யாவும் கலை, இசை, இலக்கியம் முதலியவைப் பற்றியே யிருந்தன. அவைகளைப் பற்றி அவர் எழுத முனையுங் காலை, எவரது அபிப்பிராயத்தையும் கேட்க அவர் விரும்பினாரில்லை. இயல்பாகவே இவரது வாக்கு ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் வகை பெற்று விளங்கவே, இவரது நல்லுரைகளில், நகை ததும்பித் துள்ளி விளையாடத் தொடங்கியது. உலகின்கண்ணுள்ள நிறை மாண்பினையும் குறை மாண்பினையும் கண்டறிந்த இவரது உள்ளம் மக்களுயிரின் போலித் தன்மையினையும் நய வஞ்சக நடிப்பினையும் உணர்ந்து உள்ளே நகைத்து சமுதாய சூழல்களை உணர்ச்சியும் நகையும் ஒருங்கே ததும்பும் படி அரங்கேற்ற ஆர்வங் கொண்டது. இவ்வாறு கலையுண்டு தான் உண்டு என்று இருந்த ஷாவுக்கு, தம் அன்னையார், இலண்டனில் (London) இசை ஆசிரியத் தொழிலினை ஏற்றுக் கொண்டது முதல், இலண்டன் வாழ்க்கைத் துவங்க ஆரம்பித்தது.

ஷாவின் கலை வாழ்க்கையின் பின் பகுதி உலகம் போற்றும் நிலை எய்தினாலும் இவரது வாழ்வின் முற் பாகம் முற்றிலும் அறிவுறு நாள் முதல் இருளில் மிளிரும ஒளியின் நாடகமாயிருந்தது. இவர் செல்வ மிக் குடையார் வாழ்க்கைக்கு இயைந்த எண்ணங்களும் கனவுகளும் கருத்துட் கொண்டவராயினும், இவரது குடும்பம் வாழ்வைக் கெடுக்கும் வறுமையின் சூழ்நிலையால் துயருற்றதினான், இவர் செல்வர்களைப் போல் வாழ்க்கை நடாத்தும் ஆற்றலிலராயிருந்தும், மனக் கவலை ஒரு திவலையின்று, வாழ்க்கைப் போரினில் இறங்காது தம்மைக் காத்துக் கொண்டார். அறந் தாங்கி நிற்கும் அறிவாளராகிய ஷா, அருளுருக் கொண்டு பொருளுலகில் நடமாடினார். அறத்தால் வரும் இன்பத்தை நுகர்ந்து வாழ்வாங்கு வாழ உள்ள முடையவர். கலைப் பெருமை வல்லவர்.

மன வலிமை வாய்ந்தவர். குற்றம் கண்டபோது கருத்தோடும் கனிவோடும் இடித்துரைக்கும் பண்பினர். வேம்பும் கடுவும் போன்று வெய்தாகக் கூறும் இயல்பு வாய்ந்தும் அவர் அவ்வியல்பின் வழி, பிறர் பால் நகைமுகங் காண விழைவார். அவர் வாக்கினின்று வருவவெல்லாம் இதயத்தை ஊடுருவும் நகைச் சொற் கவிதைகளே. அருள் வாக்காக மலரும் அவர் தம் கவிதையில் பொருள் நிறைவு காண இயலும். அறம் நவிலும் நெஞ்சின ராதலின் பிறர் துன்பங் கண்டு துன்பாற் கரையும் நீர்மையர். பெருவகைத்தாய்ப் பெட்டவை யாவையும் கண்டபடி உண்டவரில்லை. புலை கொலை யற்ற நெறியிற் படர்ந்து நங் நாட்டு முந்தையோர் கண்ட அருள் வாழ்வினைப் போற்றும் நிறை மாந்தர். தேசுறு வடிவினர். உயிர்க் கருணை பொழியும் திருமுக முடையார். ஒளியுறு கண்கள், இன் சொல் கமழும் தெளி வுறு மொழி, களி யுறு சிந்தை, எளிய மாசற்ற வாழ்வு, ஒள்ளிய தாழ்மை, பெருமிதம் தாங்கும் தோற்றம், தூய ஒழுக்கம், இவற்றுடன் அவர் விளங்கினர்.

ஷாவுக்கு இலக்கிய வாழ்க்கை இலண்டனில் தொடங்கிய பொழுது ஷாவுக்குக் கலையின் பொருட்டுக் கலைக் கொள்கையின் கருத்தில் ஊன்றிய திட நம்பிக்கை யில்லாதவராய்த் திகழ்ந்தார். மொழியின் வாயிலாக வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்ட வல்லது இலக்கிய மென்றும், நுவலப்படும் பொருளின் பண்பினை உள்ளது உள்ளவாறே நன்கும் ஒன்பதும் தோன்ற இலக்கியம் கிளத்தல் வேண்டு மென்பதூஉம், இலக்கியம், கல்லாற்றுப் படுத்தும் இயற்கை நெறிப் பண்பினை இயல்பாகக் கொண்டு எழில் நலமொடு, மக்களனைவரும் பொதுவாகப் பயன் படக் கூடிய நிலையில் திகழ வேண்டு மென்றும் அவர் கருதினர். இத் தகைய இலக்கியப் பண்புகளைக் கொண்டு மனித சமுதாயத்தைத் திருத்தும் சீர்மையுடைய புதுமைக் கதைகளை ஆண்டிற்கு ஒன்றாக 1879 முதல் இயற்றி உலகுக் களித்தார் சீரெழுத்தாளர். இவைகள் யாவும் உலகின் கண் நிலவும் இன்ப துன்பங்களை புகைப் படங்களாகப் பிடித்துக் காட்டி மனத்தைக் கசிவிக்கும் இலக்கியப் பண்பினை வாய்ந்தவை யெனல் மிகை யாகாது. முதிர்வு இன்மை (Immturity—1879) எனும் புதுமைக் கதை வாழ் வின்பத்தையும், காதலர்கள் காதலாற் கலந்து எய்தும் நலத்தையும், ஆடவாது தனி வாழ்வின தியல்பினையும் விளக்கும் பெற்றி வாய்ந்தது. வாழ்க்கையின் நலனையும் இயற்கை உண்மையினையும் செழுமையுற முடிவு கட்டி

விழுமிய கருத்துகளை விளங்க உரைக்கும் மாண்பு இக்காதையினில் இயல்பாய் அமைந்ததினுன், வாழ்வின் குறிக்கோளைத் தேருவார்க்கு இஃது ஓர் இலக்கியச் சுனையாகும்.

அறிவியலுக்குப் புலனுகா முடிப்பு (Irrational knot-1880) என்பது நங்கைகளுக்கு நல் விருப்பங்களால், நிறை முறையாய மேதக்க வாழ்வில் எய்தும் விரி நலனையும் அவர் தம் உரிமையின் உண்மைப் பெருமையினையும் செழிப்பினையும் இறுத்துத் தெளி வுறுத்தும்.

கலை வல்லாரிடையே காத லின்பம் (Love among artists—1881) என்பது கலை யின்ப வாரிதியில் ஆழ்ந்து வாழ விழைதல்வழி, காத லின்பத்தின் சிறுமையும் வெறுமையும் புலப்படும் வகை கூறி, கலை நலத்தில் நாட்ட முடையார்க்கு வாழ்வின் விரிந்த நோக்கத்தையும் உலகளாவி இலங்கும் கலையழகின் பரந்த இன்பத்தையும் பயனையும் வற்புறுத்துவது.

காஷல் பைரனின் தொழில் (Cashel Byron's Profession—1882) என்ற புதுமைக் கதையில் சிறுமை யொழித்து ஒருவர் தமக்குத் தாம் உண்மையாகத் தொழிலினை நடத்தலே பெருமை என்பதும், உள்ள எழுச்சி கொண்டு யாவரும் பிழைப்பதற்கேற்ற தம் தம் நற்றொழிலினைத் திறனுந் தகுதியும் அறிந்து அற வழியில் பயிற்றி வாழ்வதே ஒள்ளிய புகழாகும் என்பதும் இனிது விளங்கும்.

பொதுவுடைமைக் கொள்கையினைப் பேணுத பொதுவுடைமை வாதி (An unsocialist Socialist-1883) என்ற கதையின் கண், உலகினிலே நிலவும் குறைகளை நீக்கி, உலகினையே திருத்தச் சாலையாக ஆக்க முயலும் ஓர் பொதுவுடைமை வாதி தன்னந் தனியாய் பொது நலப் பணிகள் பல புரிய முற்பட்டு இறுதியில், மேற்கொண்ட வினையினையே குறைபட விட்டுத் திறமையிலாது வாதாடுஞ் செயல் யாவும் அறியாமையின் பிதற்றலாக மாறு மென்பதையும், சமுதாய சீர் திருத்தப் பணி புரிவோர் அறிவிற் சிறந்த தக்காரது இனத்திற் சார்ந்து அவர் தம் நன்னெறியினைப் பற்றி நிற்கும் ஆற்றலும் தியாகமும் கொண்ட வித்தகராயிருத்தல் வேண்டுமென்றும், கல்லினம் போன்ற துணையில்லாது தனிமையே தலை யெனப் பொதுப் பணியில் இறங்கும் தன்மை இன்மை புகுத்தி விடும் என்ற தத்துவ உண்மையினை ஷா சிறப்புற விளக்கி யுள்ளார்.

கசடற கற்கக் கற்க நாவூறும் இயல்பு வாய்ந்த இவரது இலக்கியம் மக்கள் பால் பெருமை உறுவதும் சிறுமை எய்துவதும் இல்லையெனக் கண்ட ஷா, உள் ஞணர்வு பெறு மக்களுக்கு இலக்கியக் கலையால் நினையளவு கூடப் பயனில்லையென வுணர்ந்து, அன்னாரது உள்ளக் கிளர்ச்சியினை நெகிழச் செய்யவல்ல செவ்வி இசைக்கு இசைந்ததென, செய்தித் தாள்களிலும் திங்கள் வெளியீடுகளிலும் (The Star, Pall Mall Gazette, the World) இசைப் பொருள்களின் பொதுத் தன்மையினை விளக்கி, உள்ளுருக்கமே உயிராய் இலங்கும் பாக்களை யாத்து வெளியிடும் முயற்சியில் ஈடுபடலாயினர். மற்றும் உயிருக்கும் உணர்ச்சிக்கும் பயனாகும் இசைக் கலை வழி எளிய பொது மக்கள் உள்ளத்திலும் வாழ்விலும் தமது பாக்களின் உயிர் உணர்ச்சிகள் முழங்கி எதிரொலிக்க, இசை பற்றிய இன்பக் கட்டுரைகளை எழுத முனைந்தார். பொது மக்களுக்கு ஷா இம் முறையில் இசைக் கலைக் கண்ணைத் திறந்து வைக்கவே, அன்னவர் பால் உறங்கிக் கிடந்த இசை யறிவு ஷாவின் ஆற்றலால் உற்றெழுந்து, சமுதாயத்திற்கு நல்ல பயனாகும், அன் புள்ளம், ஆன்ம நேயபுத் துணர்வு, ஒற்றுமை யின்பம், நிறை வாழ்க்கை முதலியவற்றில் மக்களை நாட்டமுறச் செய்தது. இசை இன்பத்தையும் அறிவையும் பொது மக்கள் பால் ஊட்டிய ஷா, செவி மடுத்த அளவிலே மனத்தை உருக்கி இனிமை தரும் இசையைக் காட்டிலும், உன்னுந்தோறும் உள்ளக் கிளர்ச்சிகளை நெகிழச் செய்து மக்களைக் கனிவிக்க இயலும் இலக்கியம் பல்வகையானும் உயர்ந்ததெனச் சுட்டிக் காட்டி மீண்டும் மக்களை இலக்கிய உணர்வும் பண்பும் கொள்ள விழிப்புறுத்தினர். இதன் பின்னரே இவர் தம் இலக்கிய நூல்கள் உணர் வாற்றல் மிக்க பொது மக்கள் செந் நாப் பழகி வரலாயின. இவ்வாறு இவரது இலக்கிய நயன் யாவும் உணர்வுடைய மக்களுக்குப் பயன் சுரந்து அவ் வழியே தம் மளவில் பிறங்கிப் பெருமை யடைந்தது பற்றி ஷாவுக்கு 1926-ஆம் ஆண்டில் நோபெல் வெகுமதி வழங்கப்பட்டது. தமக்கென வாழாது பிறர்க்குரிமை பூண்டு வாழும் சித்தம் அழகியார் தமக்குரிய பரிசினை ஸ்விடன் நாட்டு இலக்கிய வளர்ச்சிக்குப் பயன்படுமாறு அருளினர். யாவரும் போட்டியிட்டுப் பேணும் இப் பரிசினை ஒரு தலையாய் வேண்டாது தம மனச் செம்மையினை நிலை நிறுத்திய ஷாவின் திறம் உள்ளுங்காலை உரை வரம் பறியா வியப்பினைத் தருவதாகும்.

(தொடரும்)

சிலப்பதிகார ஆய்வு (Criticism)

வேலூர்க் காரழகன்.

வழக்கொழியா தெழிற் செழுமையுடன் தனித்துத்திகழும் மொழியாம தமிழுக்கு இலக்கணத்திற் கிலக்கணமாகவும் கலையியல் பனுவலாகவும் பிறங்கும் தொல்காப்பியத்திற்கும் அற இயல் நூலாம் திருககுறளுக்கும அடுத்து இயலையும் இசையையும் கூத்தையும் ஒருங்கே முழக்கும் மாண்புடைய உவமை யற்ற உயர் பெரும் நூல் இளங்கோவடிகள் வனைந்த முத்தமிழ்ச் சித்திரமாம சிலப்பதிகாரமே யாம். முதற் சங்க காலத்துத் தண்டமிழ்த் தங்கக்கோலாம் செந்தமிழ்ச் செங்கோலேந்தி மொழி அரசோச்சித் திட்பமும்—நுட்பமும்-ஒட்பமும்—அறிவும்—கலையும்—செறிவும்—நிறைவும்-தெளிவும்-விளக்கமும்-அளவையும்-யாப்பும் மிளிரும் மாண்புடைய உவமையற்ற கலைவாழ்வியற் கருவூலமாம் தொல்காப்பியத்தை யளித்த தொல்காப்பியருக்குப் பின்னர் மூவாயிரமாண்டுகள் இலக்கியமின்றி வெறும பாலைவனமாக இருந்த தமிழகத்தை இலக்கியப் பூஞ்சோலையாக இலங்க வைத்த உயர் தனிச்சிறப்பு மூன்றும் சங்கத்திற்கே உண்டு.

தொல்காப்பியரின் அகப்புற இயல்களை முன்னிறுத்தி இயற்கைக்கும் மக்களுக்கும் உள்ள நிலைத்த தொடர்பால் நிகழும் உணர்ச்சிகளைச் செய்யுளியலால் செழுமையுடன் செந்தமிழில் கவிமாலையாகத் தண்டமிழ்ப் புலவர்கள் தகவுடன் யாத்தனர்; அதனோடல்லாமல் இன்பம்—பொருள்—அறம் என்றியம்பிய தொல்காப்பியரின் மூன்று சீரிய சொற்களையே தலைமையாகக்கொண்டு அறம்—பொருள்—இன்பம் என்று மாற்றி அற வாழ்வியல் இலக்கியம் யாத்து யாவர்க்கும்—எக்காலத்துக்கும்—எந்நாட்டுக்கும் ஏற்புடைத் தாகத் தோற்றுவித்தார் வான் புகழ் வள்ளுவர். தொன்மைத் தொல்காப்பியமும் வள்ளுவர் குறளும் உணர்ச்சிப் பாக்களைக் கொண்ட தொகை நூல்களும் அருந்தமிழன்னையை அழகுற வைத்தனவென்றாலும், மீண்டும் கடல்கோள் வந்தமையால் தமிழகத்தின் பெரும பகுதி அழிந்ததையோ !

கொடுங்கடல்கோளுக் கிரையான தமிழகம் பல அரிய வரலாற்றுச் சான்றுகளையும் கலை இயல் நூல்களையும் இழந்ததுடன் சிற்பம், ஓவியம், சமயம், மருத்துவம், கூத்து, இசை, அரசியல், இன்ன பிறவற்றை யறிய இயலாது போனமை பெருங்

கேடன்றே! தொன்மைத் தொல்காப்பியமும்—வள்ளுவன், குறளும்—தொகை நூல்களும், எஞ்சி நின்றனவென்றாலும், வரலாற்றையும்—நாகரிகத்தையும்—கலை இயலையும்—சமய இயலையும், அரசியலையும், இயலியலையும், இசையியலையும் — நாடக இயலையும் ஆன்ற சான்றுகளுட னியம்ப, இ ளங்கோவடிகள் அருந்தமிழகத்தில கடல் கொண்டமையால் பேரிருள் நிலவிய ஞான்று முத்தமிழ் முழுப்பிழம்பாகக் கலைமணி முடிதாங்கித் தண்டமிழ்த் தங்கக்கோலேந்தித் தகவுடன் தமிழகத்தில் தோன்றினர்.

சேரநாட்டு மன்னனின் இளைய மகனாக இளங்கோவடிகள் அரும்பி நாடாளாமல், நங்கையுடன் வாழாமல் குணவாயிற் கொட்டம் புகுந்து உளத்தைத் தூய்மையாக்கி இறையருள் பெற்று இறவாப் பெருமொழிக் கிறவாப் பேரிலக்கியம் யாத்து உலகப்பெருங் கவிகளுள் ஒருவராக விளங்குகிறார். மேற்புலத்து முதற்பெருங்கவி ஹோமர் என்னும் நல்லிசைப்புலவர். மேற் புலத்து இலக்கியக் கருவூலமா யிலங்கி அவலத்தை (Tragedy) அறைந்தார்; இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகாரம் அவலத் தின் கருவூலமாகத் திகழ்கிறது. உணர்ச்சிகளைக் கூறும் கன்னித்தமிழ்ப் புலவர்கள் போலல்லாமல், பாத்திரங்களைக் கொண்டு பேரிலக்கியத்தைப் பிறங்கவைத்துப் பீடுறும் புதுமை யின்பொலிவாக விளங்கினும், ஒல்காப்புகழுடன் ஒளிரும் தொல் காப்பியரின் அகப்புற இயல்களில் தோய்ந்து செய்யுளியலி னின்று வழுவாமல் சிலப்பதிகாரத்தைச் சித்திரித்ததுடன் அவர் தம் திணைமயக்கத்தின் நுண்மையை இளங்கோவடிகள் கோவ லன் வாழ்வுக்கே எடுத்துக் காட்டியுள்ளார்.

நிகழ்ச்சிகளுக் கிரையானவர்க ளெய்தும் உணர்ச்சியை உணர்ந்து, அவ் வுணர்ச்சியைச் சொல்லோவியத்தில் வரைந்து, படிப்பவர்களும் அவ் வுணர்ச்சி பெறும் பெற்றிமையுடன் வரைபவரே முழுப் பெரும் புலவர்; உயர்வும் சிறப்பும் எளிமை யும் தூய்மையும் மிளிரும் வார்த்தைகளால் எழில் நடையில் வரைந்து, நற் பொருள்களை நவின்று, அனைவரையு மாழச் சிந்திக்க வைத்து, ஓர்ப்புக் கிரையாக்கி, மெய்ப்பொருள் காண ஊக்கி, மேல் நிலைக்கு மக்களை உயர்த்தி உயரிய அறிஞர்களாக்கு வதே முழுப் பெரும் புலவர்களின் தலையாய பணி. சிலப்பதி காரத்தைப் படிப்போர் உணர்ச்சிக் கிரையாகி ஓர்ப்புக் குடன் பட்டு மேல் நிலை எய்துவ ரென்பது திண்ணம்.

உள்ளதை உரைத்து ஏனையோரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட இளங்கோவடிகள் நலமிக்க நடையால் நலமுறும் நற் கருத்துக்களை மக்களுக்கு ஊட்டி அறிவியலால் மக்களை உவப்பிக்கு முயர்வுக் கீடுண்டோ?

பொதுவாக இருபத்தைந்து பாத்திரங்களைக் கொண்ட சிலப்பதிகார இலக்கியக் கோயிலி விலங்கும் உவமையற்ற பாத்திரங்களின் பண்புகளை யாராயுங்கால், மாதர்களே மாண்புடையவர்க ளென்றும், ஆனுல் ஆண் மக்களோ சிறப்பற்றவர்களென்று மறியக் கிடக்கிறது. பொருட் செல்வமும் கலை யறிவும் பெற்ற கோவலனையும்; ஒழுக்கமே உருவான வீரக் கற்பரசி கண்ணகியையும்; தூய ஒழுக்கமும் அறக் கற்பும் எண்ணெண் கலைகளுமே உருவாய பரத்தையர் மரபிற் றோன்றிய மாதவியையும்; அருகனின் அற நெறிப் பிழம்பாகிய கவுந்தி அடிகளையும்; தலையாய கற்பரசி கோப்பெருந் தேவியையும்; மங்கையர் மையலில் மூழ்கி ஆராய்ச்சி யிழந்த நெடுஞ் செழியனையும்; சூதும், வஞ்சகமும், கள்ளத்தனமும் ஒன்ருகிய நஞ்சுடைப் பொற்கொல்லனையும்; அணுகியவர்களுக் கடைக்கலந் தந்த மாண்புடைய மாதரியையும் முன்னிறுத்தி வாழ்வியலை விளக்கும் விளக்காக விளங்குகிறது சிலப்பதிகாரம். கனவும் சகுனமும் கட்டாயம் நடைமுறையில் நிகழ்கின்றன வென்று அறிகிறோம்.

கற்பரசி கண்ணகியும், கட்டழகன் கோவலனும் நாடறிய நன் மணம் புரிந்து இன்பத்தைத் துய்க்கையில் கண்ணகியினெழிலைத் தன்னையு மறந்து கோவலன் புகழ்ந்து கூறியதையுண்ணுங்கால் எழில் வயப்பட்டவனுகத் தெரிகிறது; ஆனுல் அரசவையி லரங் கேறிப் பாடி ஆடிப் பரிசு பெற்ற மாதவியின் சூளுரைக் கிரையான கோவலனின் நிலையை நன்கு ஆராய்கையில் யாழ் மிழற்றும் கலை யறிந்து, அக் கலையைப் பெரிதும் விரும்புவதால் மாதவியை யடைந்து இன்பத்திலும கலையிலும் தோய்ந்து கிடந்தா னென்பது புலனுகிறது. மாதவியும் கலையை விரும்புபவனையே நாடினுளன்றி வேறொன்று மில்லை யாதலால், கலைக்காகவே ஒரு துணைவனைத் தேடி யடைந்தாள். கண்ணகியினெழிலை மாசறு பொன்-வலம்புரிமுத்து-காசறு விரை-கரும்பு-தேன் என்று கோவலன் புகழ்ந்தா னெனினும், சிறு வில்லும் நீலமலரும குமிழம்பூவும் சொவ்வைக் கனியும் உறுப்பாகக் கொண்டவள் மாதவி என்றும் கூறியுள்ளான். கலை யறிவும் கற்பும நிரம்பிய மாதவியையும் கற்பே உருவான கண்ணகியையும் எழிற்றுரை கொண்டு நோக்கின் எழிலில் குறையுடையோரெவருமில்லை. மாதவியுடன் கலைக்காகவே மகிழ்ந்து திகழ்கையில் இந்திர விழாவின் போழ்து பதினொரு கூத்துக்கள் ஆடிய மாதவியின் மாண்பைக் கூறவும் வேண்டுமோ? இசையாலும், கூத்தாலும், இன்பத்திற் றிளைத்த கோவலன் கடற்கரையோரத்தே மாதவியுடன் வெண் மணல்மீ தமர்ந்து நீல நிறக் கடலைக் கண்டு கழிபேருவகை எய்துகையில் கோவலன் யாழ்

பிழற்றிக் கங்கையைப் பாட்டுடைத் தலைவியாகப் பாடியதுடன் கங்கையைப் புணர்ந்தாலும் காவேரி கவலை கொள்ளா திருத்தலே பெருங் கற்பெனப் பாடிய கடமைத் தன்மைக்கு மாதவி பிரிந்தே போக வேண்டும்; ஆனால் மாதவியோ ஒழுக்கமும் கற்பும் கல்வி யறிவும் நிரம்பியவளா யிலங்கியதுடன் கலை யறிவு துறை போகப் பெற்றிருந்ததால் கோவலனை யன்றி நெஞ்சிலே வேறெவரையு மெண்ணாது அகப்பொருள் ததும்பப் பாடிய மைக்கு, கோவலன் அறிவுடையவனாயின் தான் பிறி தொருத்தியைப் பாடியும், மாதவி வேறெவனையும் கூறாமல் பாடினளாதலின் சால்புடையவ ளென்று மன்னிப்புக் கோரி யிருத்தல் வேண்டும்; மன்னிப்புக் கோராமல் பிரிந்தோடி, மனைவி கண்ணகியிடம் சென்று பொரு ளிழந்து வறுமை யுற்றதாகக் கூறி மாதவியைப் பழித்தமையை எண்ணுங்கால், பொருளுடன் மாதவியோடு வாழப் பொருளில்லாமையால் மாதவியுடன் வம்பிழுத்துப் பிரிந்தா னென்பது தேற்றம்.

நிறை யறிவுடைய மாதவி, பிரிந்த கோவலன் மீண்டும் வருமாறு தாழம்பூவைத் தாளாகக் கொண்டு, பித்திகையை எழுத்தாணியாக்கி-செம் பஞ்சுக் குழம்பில் தோய்த்து, புணர்ந்தோர் வரக் காலம் கடந்தாலும், தணந்தோர் துணையை மறந்தாலும், மல ரம்பு உயிரைக் கொல்லு மென்று முடங்கல் வரைந்து அதை வயந்தமாலையிடம் தந்து கோவலனுக்கு விளக்குமாறு பணித்தமையால், கோவலனின் குறை யுடைமை இனிதே விளங்குகின்றது. இளங்கோவடிக ளிம் முடங்கலைப் பற்றிக் கூறுகையில் அறுபத்து நான்கு கலைகளும் மகிழ்ந்தன வென்றமையால் கலைகளின் பிறப்பிடம் மாதவியே என்பது தேற்றம். துறவு பூண்ட இளங்கோவடிகளே பரத்தையர் மரபில் தோன்றிய மாதவியின் முடங்கலின் மாண்பைக் கூறுகையில் மா நிலத்தில் மங்கைய ருலகில் மாதவிக் குவமை யில்லையே. தலைவ னிறந்தால் தலைவி இறப்பது தலையாய பத்தினியின் அறமாயின் தலைவன் பிரிவே தலைவிக்கு மரண மெனின் பத்தினி யியல்பினினு முயர்வ வன்றோ மாதவியின் கற்பு!

மீண்டும் கௌசிகனிடம் மாதவி முடங்கல் விடுக்கையில் 'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்; வடியாக் கிளவி மனங் கொளல் வேண்டும்; குரவர் பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோடு இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியாது கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்; பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி,' என்று வரைந்தமையை ஆராயுங்கால் மாதவி கோவலனை அடிகளாகவே கருதி வணங்கியமையை எண்ணுங்கால் நிறையுடைப் பத்தினி என்று கூறுவதும் முடங்கலைக்

கண்ட கோவலன் பிழை தன்பா லுளது என்று கூறியமை மாதவி மாசற்றவ ளென்பதும் தேற்றம்.

கண்ணகியை யடைந்த கோவலன் விரைவிலே மதுரை எய்திப் பொருளீட்ட விரும்பி இருவரும் கவுந்தி அடிகளின் துணை கொண் டேகுகையில் இடைக் குல அணங்கு மாதரியிட மடைக் கலம் புகுந்த ஞான்று, மாதரி அணங்காயினும கோவலனும் கண்ணகியும் தங்க இட மளித்து ஆவன அளித்தமையை எண்ணுங்கால், அற்றைக் கால அணங்குகள் அச்சமின்றி உதவிய உயர்வு இனிதே விளக்குகிறது. கண்ணகி அறுசுவை யால் சமைத்த உணவை இன்புட னளிக்க, கைத் திற வினையால் செய்த பீடத்தில் தலைவனை யமர்த்தி அவ னடிகளைக் கழுவி வணங்கியபொழுது கோவலன் பெரிதும் வருந்தி இல்லற மிரிந் ததை இயம்பித் தன் தவற்றை யுணர்ந்து மனைவி கண்ணகியை 'பொன்னே-கொடியே-புனைபூங் கோதாய்-நாணின் பாவாய்-நீணில விளக்கே-கற்பின் கொழுந்தே-பொற்பின் செல்வி' என்று கூறியதை யுன்னுங்கால், கண்ணகியி னகத்துக் கிளர்ந் தொளிரும் பண்பின் நலங்கள விளங்குகின்றன. கணவனின் வருகைக்காகக் கடவுளை வணங்காது கணவனன்றி கடவுளை வணங்குவது கற்புக் கிழுக் கெனத் தேர்ந்து கடவுளை வணங்கா மலே தனிமையில் வதிந்தமை கண்ணகியின் பெருமை யாம் கற்பின் திண்மை விளங்குகிறது.

ஒரு சிலம்புடன் மதுரை ஏகிய கோவலன் சிலம்பை விற்கை யில், அரசியின் சிலம்பைக் களவாடிய பொற்கொல்லன் கோவலன் மீது பழி சுமத்த உறுதி பூண்டு, கோவலனை ஓரிடத் திருக்குமாறு பணித்து, பாண்டிய மன்னன் மங்கையர் மையலிலே தோய்ந்து மயங்கி இருந்து வெளியேறும் நேரத்து அரசனின் அடி பாதத்திடை வீழ்ந்து மந்திரத்தால் காவலாளரை மயக்கி அரசியின் சிலம்பைக் களவாடிய கள்வன் உள்ளான் என்று கூறவே, மன்னன் மங்கையர் மையலில் மயங்கியமையால் ஆராயாது கொல்லுமாறு ஆணையிடவே, கோவலன் கொல்லப் பட்டான்; கோவலன் கொலையுண்ட செய்தி கண்ணகிக் கெட்டியதும் பெரிதும் வருந்தித் துன்புற்று சிலம்பு விற்கச் சென்றவன் கொலையுண்டான் என்று ஐயப்பட்டு ஐயந் தெளியக் கதிரவனை நோக்கிக் கோவலன் கள்வனோ என்று வினவியதற்கு எதிர்மறையாக 'அல்லன்' என்றொரு குரல் வந்ததும், மங்கையர் நின்றுகொண்டிருந்த வீதியில் உள்ளத் துயரைக் கரை புரளும் கடல் வெள்ளம் போல் அறைந்து, வெட்டுண்ட கோவலனிடம் உரையாடி உண்மை யறிவதாயும் அங்ஙன மறிய வியலவில்லை எனில் இகழுமா றியம்பி வெட்டுண்ட கோவலனை எய்தியதும்

காலையில் கணவனின் கழுத்திலிட்ட மாலையைத் தன் கதுப்பில் செருகியதையும் மாலையில் உடல் குருதியால் நனைந்த கொடுமையையும்-காலையில் சந்தனத்தால் பூசிய உடல் மாலையில் வெட்டுண்டு புழுதி படிந்திருக்கிற தென்று கூறிக் கொலைக்குக் காரணம், அரசன் தவறிழைக்க அவளின் (கண்ணகியின்) சென்ற பிறப்பின் தீவினை யென்று உலகம் கூறு மென்றும், அரசன் தவறிழைக்கக் கோவலனின் கடந்த பிறப்பின் தீவினை யென்று உலகம் கூறுமென்றும், அரசன் தவறிழைக்கக்கோவலன் தீவினை நுகரக் கொலை நிகழ்ந்தது என்று உலகம் கூறுமென்றும் புலம்புகையில், கோவலன் உயிர் பெற்றெழுந்து கண்ணகியின் முகம் வாடிய தென்றும் கண்ணகி இவண் இருக்க வேண்டு மென்றும் கூறித் தான் வானகம் புகுந்ததாகவும் காண்கிறோம். கோவலன் கூறியதைக் கண்ணகி மாயமோ அல்லது ஒரு தெய்வம் மருட்டியதோ என்று ஐயுற்று அரசனிட முரையாடி உண்மை காண அரசன் வாயிலை எய்துகிருள்.

உலகில் எப் புலவனும் கையாளாத மிகத் துயரமான உண்மையில் நிகழ்ந்த வெட்டுண்ட ஒரு பாத்திரத்தையும் அதன் துணையுடைய துணைவியின் பாத்திரத்தையும் உள்ளவாறு சித்திரிக்கும் மிகக் கடுமையான கொடுமையான சுடுமையான நிலையை இளங்கோவடிகள் கையாண்டு உண்மைநிலையை உள்ளவாறு துளக்க மற விளக்கி அனைவரையும் அவல ஆழியிலே மூழ்க வைப்பதுடன் முடிவு காணுத சிரிய சிந்தனையின் வித்தை அறிஞர்களுள்ளத்தில் தூவி கொலைக்குக் காரணம் மனைவியின் தீவினையா? அரசனின் தவறு? கோவலனின் தீவினையா? என்ற பகுத்தறிவான வினுக்களைப் பாவை பகர்ந்ததைப் பகர்ந்து பெரிதும் சிந்தனைக்கே அனைவரையும் அழைத்தேகும் பெருமை என்னே!

வெட்டுண்ட பிணம் பேசியதைக் கண்ட கண்ணகி ஐயுற்று மெய்யை யறிய அரசனிட மேகியதை எண்ணுங்கால், ஆவி அறைந்ததை ஹேம்லட் நம்பாமல் மெய்யை யறிய விழைந்ததைப் போன்றுளது. கண்ணகி அரசனுட னுரையாடி அரசன் தீங்கிழைத்தான் என்று மெய்ப்பித்ததும் அரசன் தவற்றையுணர்ந்து இன்னுயிரிழந்தான்; மன்னன் மங்கையர் மையலில் இருந்த நேரத்தையறிந்து அறைந்த பொற்கொல்லனின் பொய்ப் பேச்சைக் கேட்டு ஆராயாமல் கோவலனைக் கொல்ல ஆணையிட்ட மன்னன் தூய்மை இழந்தவனே; தூய்மையிழந்த மன்னன் தன் பிழையைக் கேட்ட மாத்திரத்தே இன்னுயிரிழப்பானு? மங்கையர் மையலில் மூழ்கி இருப்பினும் தூய்மை யகலாதிருக்குமோ? பிழையுணர்ந்தமை. பாவ மன்னிப்பாயின்,

பாவ மன்னிப்புக்கு மரணமா பரிசு? அரசன் இறந்தமையால் அரசியும் இறந்தாளே. கோவலன இறந்தமை முற்பிறப்பின் வினைவு என்று தெய்வம் கூறியதால் அரசனும் அரசியும் இறந்தமை எதனுல்? நாடும எரிந்தமை எதனுல்? முடிவு கண்டறியாத பெரிய நிலையைத் தோற்றுவித்து என்றும் ஆழ எல்லோரும் சிந்திக்க இளங்கோவடிகள் அடிகோலினர்.

மதுரைக்கிருவரு மேகியபொழுது வாய்மையும் தூய்மையும் அறமும உருவாய கவுந்தி அடிகளென்னும் மூதாட்டியார் துணையாக வந்து உடன் தொடர்ந்து சென்றுகொண்டிருக்கையில் சாரணர்கள் தோன்றி கழிபெரும் சிறப்புடைய கவுந்தி அடிகளிடம் வல்வினையானது ஒழியாது தொடர்ந்து தொடருமென்றும், வினை நிலத்திட்ட வித்தியல்பாகவே வளர்வதை ஒழிக்கவியலாதது போன்றதே வல்வினை என்றும், வல்வினையின் வன்மையைக் கூறிக் கடுமையான காற்றுள்ள நெடுவெளியிலிட்ட விளக்கு மிக விரைவில் அவிந்து விழுவதைப் போன்றே உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பென்றும் நிலையாமையை நவின்று அருகனின் பெருமையைப் பகர்ந்தனர். கவுந்தி அடிகள் பக்குவப் பட்டமையால் சாரணர்கள் அருள்சொரிந்து ஆட்கொண்டு வல்வினை இயலையும் உடல் நிலையாமையையும் உரைத்தமையால் சீரிய சமண சமயத்தின் உண்மைகள் விளங்குகின்றன; பின்னர் நான்மறையோன் இம்மூவரையும் கண்டதும் மதுரைக் கேகும வழியை உரைக்கையில் புண்ணிய சரவணம்-இட்ட சித்தி-பவகாரண்யம என்ற மூன்று குளங்களில் குளிப்பின் முறையே இந்திர னிலக்கணத்தையும் பழம் பிறப்பையும் அறிவதுடன் விரும்பியதை எய்த வியலுமென்றமைக்குக் கவுந்தி அடிகள் இந்திரனிலக்கணத்தை அருகனின் ஆகமத்தில் காணலாமென்றும் சென்ற பிறப்பை யறிதற்கு இப்பிறப்பி லெய்திய நிலையைக் கொண்டே வரும் பிறப்பை அறிய இயலுமென்றும் வாய்மையில் வழுவா து மன்னுயிரோம்பின் விருமபியதை எய்த வியலுமென்றும மயக்க மறக் கூறியதுடன் அறிய முடியாத பெரும் சிக்கலான பிறப்பைப்பற்றி மிக எளிதான முறையில் விளக்கிய உயர்வுக் குவமையுண்டோ?

ஒண்டொடி ஒதுங்குவதாலும் ஒண்டொடியுடனென்றுவதாலும் காமனுலும் வருகிற துன்பம மங்கையரைப் புணர்பவர்களுக்கே யன்றித் தனி வாழ்க்கையுடைய அறிஞர்களுக் கில்லை என்றும் உணவும் ஒண்டொடியுமே இன்பப் பொருளெனக் கருதுபவர்கள் துறவிக ளகற்றிய காமத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு அன்பு செலுத்தி அறையொணு அல்லலுக் கிரையானமை தொன்று தொட்டு வருகிறதென்றும், துள்பத்தினியலைக்

கவுந்தி அடிகள் மிகவும் விளக்கமாக விதந்தோதி யுள்ளார். ஆணும் பெண்ணும் ஒன்றி வாழும் வாழ்வு துன்பந் தருமென் றியம்பினும் கண்ணகியைக் கூறுகையில் கற்புக் கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமென்று மிகத் துணிவாகக் கூறினாராயின் துறவிக ளகற்றிய காமத்தைப் பற்றுக் கோடாகக் கொண்ட கண்ணகி கற்பரசியாக விளங்கியமையால் தெய்வமாயினள். காமமகற்றிய துறவிகள் தெய்வத்தை எய்தத் தவம் புரிந்தாலும் காம மகற்றாது கற்பின் பிழம்பாகத் திகழ்ந்த கண்ணகி தெய்வ மாயினமை கற்பின் திண்மையாலே, தவம் புரிந்து தெய்வத்தைக் காண்பதினும் கற்பொழுக்கத்தாலே கோதையர் தெய்வமாகும் தனிச் சிறப்பு, தமிழரின் தனிப் பெரும் நாகரிகம்.

நாடெரித்துக் கணவனைக் கண்ட பிறகே வளைய லணிவதாக துர்க்கைக் கடவுளிடம் கூறி அணிந்த வளையல்களை உடைத் தெறிந்து சேர நாடு போந்து பதினான்காம் நாள் கண்ணகி விமான மேறி வானகம் புகுந்தாள், வீடுபேறெய்திய கண்ணகி யின் பெருமையைக் கண்ட மலைவாணர்கள் சேரன் செங்குட்டுவ னிட முரைக்கையில் உடன் வந்த செந்தமிழ்ப் புலவர் சீத்தலைச் சாத்தனாரும் கண்ணகிக்கு நிகழ்ந்தவைக ளனைத்தையும நவின்றதும், வேண்மா தேவி பத்தினிக்குக் கோயில் கட்ட வேண்டுமென்று அறிவித்ததும், வடநாட்டைப் படையெடுத்துக் கனக விசயரை யடிமையாக்கி அவர்களைக் கல் சுமக்க வைத்து அக் கல்லில் பத்தினிச் சிலை யமைத்து கற்புக் கோயில் கட்டப்பட்டது கற்பரசி கண்ணகிக்கு.

சைவக் குடும்பத்தில் பிறந்த சேரன் செங்குட்டுவன் சேர நாட்டு மன்னனாக விளங்கிச் சைவநெறியைக் கடை பிடித் தொழுகி, சமண சமயம் தழுவிப் புத்தநெறியைக் கடை பிடித்து வீடுபே றெய்திய கண்ணகிக்குப் பத்தினி கோயில் கட்டினான். அவனுடன் பிறந்த இளங்கோவடிகள் சமண சமயம் புகுந்து கற்பரசி கண்ணகிக்கு இறவாப் பேரிலக்கியம் யாத்தார். மாண் புடை மாதவியோ இளங்கோவடிகளுடைய எழுதுகோலின் பாத்திரமாக விளங்கி இரு பேரிலக்கியங்களிற் றோன்றி அறவண அடிகளை யடைந்து வீடுபே றெய்துகிறாள்.

ஒரு பொற்கொல்லனின் பொய்ப் பேச்சுக்கு ஆராயாமல் இரையாகிய மன்னனின் மடமையால் கோவலன் வெட்டுண் டான்; மட மன்னனு மிறந்தான்; அவன் மனைவி கோப் பெருந் தேவியு மிறந்தாள்; நாடும் எரிந்தது; அறவுரை யறைந்து மதுரைக் கழைத்துச் சென்ற பெருந் துறவி கவுந்தி அடிகள் உண்ணா நோன்பு கொண்டின் னுயிர் நீத்தார்;

அடைக்கலந் தந்த இடையர் குல மாதரி தீமூட்டித் தீயிடை நுழைந் திறந்தாள். அந்தோ! ஒரு பொய்யால ஐந்து மரணங்கள் நிகழ்ந்தன; நாடும் எரிந்ததே. கோவலனின் மரணம் முற் பிறப்பின் விளைவாயின் மற்ற மரணங்களின் காரணத்தை யறிய இளங்கோவடிகள் ஆராய்ச்சி வித்திட்டு எக் காலமும் யாவரும் ஆழச் சிந்திக்க அடிகோலினும் ஒருவனுடைய தவறு எண்ணில ஊறுகளைத் தோற்றுவிக்காமலில்லை என்ற முடிந்த முடிபுக்கு வரவேண்டிய நிலையை உண்டாக்கி யுள்ளார். சகப் பிரியனுன ஷேக்ஸ்பியரும் ஒருவனுடைய தவறு விண்ணுலக அண்டங்களையும கறைப் படுத்துமென்று கூறியுள்ளார்.

இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகாரம் உலக இலக்கியங் களுடனிடம் பெறுவதுடன் வெறும் கற்பனையை யடிப்படை யாகக் கொள்ளாமல் உண்மை நிகழ்ச்சியை யடிப்படையாகக் கொண்டு அவலத்தின் கருவூலமாகத் திகழ்கிறது. நூலமைப்பு முறையைக் காணும் பொழுது தமிழன் வியக்காம லிருக்க முடியாது. அகத்திணையாம் திருமணத்தைப் புகார்க் காண்டத் திலும் காஞ்சித்திணையாம் அவலத்தை மதுரைக் காண்டத்திலும் வடநாட்டைப் படை எடுதத வரலாற்றை வஞ்சிக் காண்டத்தி லும் காண்கையில் முதல் பகுதியில் திருமணமும் (Comedy) இரண்டாம் பகுதியில் அவலமும் (Tragedy) மூன்றும் பகுதியில் வரலாறும் (History) பொதுவாகக் கூறியுள்ளமை பாராட்ட லுக் குரியதே. என்றுலும் இளங்கோவடிகள் வரலாற் றுண்மையைச் சிறந்த முறையில் புகுத்தி தமிழ் மக்களை விழிக்க வைத்துள்ளார். புகார்க் காண்டத்தில் திருமா வளவன் வட நாடாண்ட பெருமையையும், மதுரைக் காண்டத்தில் குமரி நாடு கொடுங் கடல் கொண்டதையும், இராமன் மனைவியைப் பிரிந்து துயர் எய்திய குறிப்புமம, நளன் தமயந்தியின் குறிப்பும், வஞ்சிக் காண்டத்தில் குமரி முதல் இமயம் வரை ஆண்ட சேரலாதனின் சிறப்பும், ஐவருக்கும நூற்றுவர்க்கும் நிகழ்ந்த பாரதப் போரில் சோறளித்த சேரனின் பெருமையும் கூறப் படுவதால் வரலாற்றை விளக்கச் சிலப்பதிகாரம் அரண் செய்கிறது.

ஐரோப்பிய இலக்கியத்தி னுடலாகவும் ஆங்கில இலக்கியத் தின் கருவூலமாகவும் விளங்கும ஷேக்ஸ்பியரின் பெருமையை யறிய இருநூறு ஆண்டுகளாயின. அதற்குப் பிறகு தான் அவர் தம் பெருமையை ஒருவாறு அறிந்து உலகுக்கு விளக்கி னர்; ஷேக்ஸ்பியரின் நாடகங்களும் செய்யுட்களும் ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்த பின்னர் தான் ஜெர்மன் மொழிக்கு இலக்கியம் ஏற்பட்டதால் ஷேக்ஸ்பியர் தான் ஜெர்மன்

இலக்கியத்தின் தந்தை என்று உலகம் காண்கிறது. லெஸ்ஸிங்-வீலேண்ட்-ஷீகல் என்ற ஜெர்மன் அறிஞர்கள் ஷேக்ஸ்பியரின் இலக்கியத்தை மொழி பெயர்த்து ஜெர்மன் மொழிக் கிலக்கிய மாக்கினர். ஷேக்ஸ்பியரின் சாயலும் சார்பும் கொண்டதாகவே ஜெர்மன் இலக்கியமும் நற் பொருளும் (தத்துவமும்) இன்ன பிறவும் உள்ளன.

நம் தமிழகமோ இயலையும்—இசையையும்-கூத்தையும்-கலையையும் இயம்பிய இளங்கோவடிகளை இன்றளவும் ஆய்வு முறையி லறிய முடியவில்லை என்றாலும் ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இளங்கோவடிகளி னிசைத் தமிழ் நுணுக்கத்தை அருட்டிரு விபுலாநந்த அடிகள் அளந் தறிந்து யாழ் நூலென்னும் இசைத் தமிழ் நூலை யாத்து இசைத் தமிழுக்கு இளங்கோவடிகளே தந்தை என நிறுவிச் சிவனடி எய்தினர். மாதவி ஆடிய பதினொரு ஆடல்களுக்கு மறுமலர்ச்சி தரும் நாடகப் புலவர்கள் தோன்றும் நாள் என்நாளோ?

ஐரோப்பிய இலக்கியத்தி னுயிராகவும் இதாலிய இலக்கியத்தின் புரைதீர்ந்த கவியியலில் முழுமை யெய்திய புலவராக வும் விளங்கும் டாண்டே தன்னைக் காதலித்துக் கைவிட்டு மாற்றானை மணந்து இறந்த பெட்ரேசை தெய்வீக தேவியாக்கி மனங் கனிந்து கனிந்து உருகி வரைந்த சொல்லோவியத்தால் ஐரோப்பிய முழுப் பெருங் கவியாக விளங்கியதுடன் முறிந்த காதலால் மன முடைந்து மொழிந்த 'விட்டா நோவா' என்னும் சொல்லோவியம் உலக இலக்கியத்தில் முத் தென மதிக்கப் படுகிறது; தமிழகத்து இளங்கோவடிகள் கண்ணகியி னவல நிலையை முன்னிறுத்திச் செந் தமிழில் சித்தரித்த சிலம்புச் செல்வம் தமிழிலக்கியங்களுள் தலையாயதாய்த் திகழ்கிறது.

ஆங்கில இலக்கியத்தில் மில்டன் வரைந்த லிசிடாசும்; ஷெல்லி வரைந்த அடோனியும்; டென்னிசன் வரைந்த இன் மெமோரியமும் மிகச் சிறந்த பாக்களென உலக அறிஞர்கள் பாராட்டுகின்றனர். லிசிடாசின் மரணத்தால் மாண்புடைய மில்டன் பியூரிடனிசக் கொள்கையில் வெற்றி கண்டதைப் போன்று சிலம்புக் கதையை வனைந்த இளங்கோவடிகள் சமய சமரசத்தில் வெற்றி கண்டார். கீட்சு இறந்தமையை முன் னிறுத்தி ஷெல்லி பாடிய அடோனி பாட்டால் ஷெல்லி துன்பக் கடலிலிருந்து வாழ்வில் மரணத்தை மூழ்கடித்து இறவா நிலை யெய்தியதை விளக்கியதைப் போன்று நம் இளங்கோவடிகள் கோவலன் வெட்டுண்டதை முன்னிறுத்திக் கண்ணகி துன்பக் கடலிலிருந்து மரணத்தை மூழ்கடித்து இறவா நிலை எய்தியதை

விளக்கியுள்ளார். டென்னிசனின் நண்பனும் டென்னிசனின் தங்கையின் காதலனுமான ஆர்தர் ஹேலம் இறந்தமையால் தனக்கு வேறொரு நண்பன் இல்லை என்றும் (To me there is no other second friend) தன் தங்கையின் வாழ்வுக்கு ஆர்தர் ஹேலத்தைத் தவிர வேறில்லை யாதலால் என்றுங் கன்னியாகவே இருப்பள் (To her a Perpetnal Maidedhood) என்று இன்மெமோரியத்தில் கூறியதைப் போன்று நம் இளங்கோவடிகள் பாண்டியன் இறந்த பின்னர் கோப்பெருந்தேவியின் நிலையை விளக்குகையில் "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" என்று இயம்பி, கணவனுக் குவமையில்லை என விளக்கி, கற்பின் திண்மையைக் கூறியுள்ளார். மேல்புலத்து நான்கு கவிகளும் அவர்களுள்ளங்களை அரித்தமையால் மனம் அனலாகிப் பாடியதைப் போன்று நம் இளங்கோவடிகள் கண்ணகியின் உள்ளத்தை அரித்தமைக்குத் தன்னுள்ள மனலானதைப் போன்றே "துன்பமாலை ஊர் சூழ் வரி" என்ற பகுதிகளைப் பாடிப் படிப்போருள்ளங்களையும் துன்பக் கொந்தளிப்பில் மூழ்கடிக்கிறார்.

இளங்கோவடிகள் மணத்தையும்-மரணத்தையும் வரலாற்றையும்-இயல், இசை, நாடகமாம் மூன்றையும்-வாழ்வியலையும்-சேர, சோழ, பாண்டிய நாடுகளினியல்களையும் கூறியதோடல்லாமல் அனைவரையும் ஆழச் சிந்திக்க வித்திட்டதுடன் மக்கள் பிறருக்குத் தீங்கிழைக்காது - கடவுளையுணர்ந்து -உணர்ந்தவர்களைப்பேணி - பொய் பகராது - புறங்கூறுது-ஊன் உண்ணுது-உயிர்க்கொலை புரியாது-தானம் செய்து-தவம் புரிந்து-செய்ந்நன்றி கொல்லாது-தீ நட்பு ஒதுக்கி-அறவோர் அவைக்களம் போந்து-பிறவோர் அவைக்களம் போகாது - பிறன்மனை விரும்பாது-துன்புற்ற உயிர்களைக் காத்து-கள், காமம், களவு, பொய் அகற்றி-அறம் புரிந்து-வீடுபேறெய்த ஆவன அறைந்து வெறும் கலைஞனுகவும் புலவனுகவும் விளங்காமல் மாற்றமில்லாப் பண்பாடுகளைப் பகர்ந்து உலகப் படைப்பாளனுக என்றும் விளங்கும் இளங்கோவடிகள் வாழ்க; அவர் தம் சிலப்பதிகாரம் அவனி முழுதும் பரவுக.

உயிரின் ஆற்றலை உணர்க.

எடுப்பு

உணர்ந்தனையா? மனமே—உன்னுள்
உறைந்தே விளங்கும்
உயிரின் ஆற்றலை (உ)

தொடுப்பு

இணர்போல் கந்தகம் இனிமையாய்க் கூட்டுமே
இணைந்துநீ பழகினுற் பேரின்பம் ஊட்டுமே (உ)

முடிப்பு

ஆழியாய் வீணிலே அலைவதினுன் மூளும்
அவதிகள் யாவையும் அறுக்கவே கேளும்
தோழனும் சிந்தனையால் சுகம்குணம் நீளும்
சோர்வையாமலே தூய்வலியால் காளும். (உ)

கி. ச. வாசுதேவன்.
திருச்சிராப்பள்ளி.

யாழ் நூல்

பேராசிரியர் விபுலானந்த அடிகளார், பதினுன் காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது. தோற்றம் பொலிந்தது.
விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.

உளநூல்

உள்ளுறை

1. முன்னுரை
2. மக்களின் பாகுபாடு
3. மனம் என்பது யாது
4. உட் கருவி
5. மனத்தின் இடம்
6. மனத்தின் பெயர்களும் ஆட்சியும்
7. மனப் பண்பு
8. குணங்களின் பயன்
9. பெண்களின் மனம்
10. மனப் பயிற்சி
11. மனத்தின் ஆற்றலும் நோக்கமும்
12. மனத்தின் வேகம்
13. மன நலத்தை மறைக்க முடியுமா?
14. கல்வியும் மனமும்
15. கற்பனை
16. கற்பனையும் கவியும்
17. மனங் கலங்காமை
18. மன அடக்கம்
19. அமைதியின் மேன்மை
20. மன அழுக்கு
21. மனக் குற்றம்
22. மறப்பும் அதனையகற்றும் வழியும்
23. உளமும் உடலும்
24. மனக் கவலை நீக்கும் வழி
25. மனத்தை விளிப்பதேன்?
26. தெய்வத்தோடொப்பாவார்
27. குழந்தைகளின் மனம்
28. விளையாட்டும் கற்பனையும்
29. உவமை அல்லது உருவகம்
30. மனம் வேலை செய்யுமிடங்களும் கருவிகளும்
31. கனவு
32. மனச்சாட்சி
33. மன ஒருமையும் மனமற்ற இடமும்

உளநூலில் எடுத்தாண்ட மேற்கோள் நூல்கள்

அப்பர் தேவாரம்
அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்
அறநெறிச்சாரம்
இராமலிங்கசுவாமிகளருட்பா
இராமாயணம்
இலக்கணக் கொத்து
உமாபதிசிவம் (வாக்கு)
உலக நீதி
ஔவையார் பாடல்
கச்சியப்பர்
கலித்தொகை
கணு நூல்
குறுந்தொகை
சிலப்பதிகாரம்
சிவஞானசித்தியார்
சிவஞானமாபாடியம்
சுக்கிர நீதி
ஞானசம்பந்தர் தேவாரம்
ஞானவாசிட்டம்
தாயுமானவர்
திருக்குறள்
திருமந்திரம்
திருவாசகம்
தொல்காப்பியம்
தொல்காப்பியவுரை
நளவெண்பா
நன்னூல்
நாலடியார்
நிகண்டு
நீதிநெறிவிளக்கம்
நீதிவெண்பா
நைடதம்
பட்டினத்தார் பாடல்
பரிமேலழகருரை
பழமொழி
பழமொழி நானூறு
பிரபுலிங்கலீலை
பெரியபுராணம்
மணிமேகலை
மனோன்மணியம்
முத்தொள்ளாயிரம்
க்ஷேத்திரக் கோவை

உளநூல்.

வித்துவான் M. குஞ்சிதபாத தேசிகர்,
தலைமைத்தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி, நன்னிலம்.

மன ஒருமையும்—மனமற்ற இடமும்.

மனம் என்பதே நினைக்கும் ஆற்றலுடையது என்பதும், மனப் பயிற்சியால் பலபொருள்களை இடைவிடாமல் எண்ணிக் கொண்டிருக்கும் இயல்பு மேவும் என்பதும் முன்னர் வரைந்தவாற்றால் தெரிவனவாம். ஒருமை என்பது ஒருபொருளில் மாத்திரம் நிலைத்து நிற்கும் மனத்தின் தன்மை என்பது பொருளாம். இறைவனுடைய உருவம், பெருமை ஆகிய இவைகளை மாத்திரம் இடைவிடாமல் எண்ணுவதால் மற்றைய உலகப்பொருள்களில் உள்ள பற்றுக் குறைவதற்கு ஒரு சிறந்த வழிமேவும். இதனை வள்ளுவர்

> பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு

என்ற பொய்யா மொழியில் மிகுந்த குளிர் காய்ச்சலுக்குப் பனிக்கட்டி கட்டுவதுபோல உலகப்பற்றை விடுவதற்குப் பற்றற்றானாகிய இறைவனுடைய திருவடிகளை விரும்பிப் பற்றுவாயாக என்றார். இவ்வாறு இறைவனுடை திருவடிகளில் பற்றுவைத்தலும் மனப் பயிற்சிக்காக நாள்தோறும் மனத்தைப் பழக்குவதுபோலவே சிலவினாடி நாழிகை, நாள், திங்கள், ஆண்டு என்று மனம் ஒரே எண்ணமாக நிலைத்து நிற்கப் பழக்கஞ் செய்தல் இன்றியமையாதது. மனம் நாளடைவில் நிலைத்து நிற்குமேயன்றி ஒரே நாளில் நிலைத்து நிற்காது. இவ்வாறு முறையாகப் பழக்கஞ் செய்தலோடு மன ஒருமைப்பட்ட பெரியோர்களின் கூட்டுறவும் இருக்குமானால் மிகவும் பயன்தரும்.

மிகுந்த ஒலி, பலர் வேலை செய்யுமிடம் முதலியன மன ஒருமைக்குப் பங்கம் விளைக்கும். ஆகையால் சோலை, ஆற்றோரம், முதலிய ஊர்ப்புறம்பாயுள்ள இடங்களே பெரியோர் உறைந்த இடங்களாகத் தெரிகின்றன. அவ்வாறுஅமைதியை உண்டாக்கும் இடங்களையே ஒருமைக்கு (தியான யோகங்களுக்கு) ஏற்ற இடங்களாகக் கருதி அமைத்துக் கொள்ளல்வேண்டும். மன ஒருமையாய் இருந்தால் கடவுளைக் காணமுடியுமா? என்ற ஐயம் உண்டாகலாம். உலகத்திலுள்ள செல்வப் பொருளை (அழியும் பொருளை) அடைய மனிதன் எவ்வளவு அல்லும் பகலும் அலுப்பின்றி உழைக்கின்றான். பெருமையைப் புகழைப் பெற எவ்வளவு உலகின்கண் பாடுபடுகின்றான். உணவுப் பெருக்கத்திற்காக நிலத்தில் எவ்வளவு பாடுபடுகின்றான். அஃதே போல நிலைத்த உறுதியான உணர்வு, பெரியோர் கூட்டுறவு, அறிவுநூல், உண்மை உயர்நடை ஆகியவைகளுடன் சில ஆண்டுகள் ஒருவர் பாடுபடுவாரேயானால் அவர் மனத்தில் அமைதியும் தெளிவும் புலப்படுவதையறிந்து மிக மகிழ இடமுண்டு. இவ்வாறு பல்லாண்டு இடைவிடாது இறைவன் பெருமையில் ஈடுபடுவாரேயானால் இறைவர் வெளிவந்து காட்சியுங் கொடுப்பர். இவ்வாறன்றி அவரவர் தகுதிக்கேற்ப அறிவுறுத்துவர். இவ்வித ஆற்றல் ஒரேவிதமா இருக்காது. செயற்கரிய செய்கை செய்த தொண்டர்களின் வரலாறுகளால் நன்கு தெளியலாம். அவர்களுடைய எண்ணங்களும், தொண்டுகளும், ஊழ்வினைகளும் ஒரு படித்தாய் இரா. இக் கருத்தினையுள்ளடக்கியே ஞானப்பாலுண்ட நமது சம்பந்தர் ஒரு பாசுரத்தில்,

" ஆட்பாலவர்க்கு அருளும்வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை கிளக்கவேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று இவைகேட்கத் தக்கார் "

எனத் திருவாய் மலர்ந்தருளியதை யுணர்ந்து தெளிக.

இவ்வாறு உயர்பண்புடைய மனத்தார்க்குச் செருக்கு (யான் எனது) இருப்பதற்கு இல்லை. செருக்கு இருக்குமாயின் வானோர்க்கும் அரிய இறைவனின் இன்னிலை (இனிமையான நிலை) யில் ஒன்றியிரார். இது,

"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகப் புகும்" என வள்ளுவர்

தெளிய வைத்துள்ளமையான் நன்குணரக் கூடியதொன்றே யாம்.

இவ் விதச் செருக்கு அற்றநிலை எய்துவது உலகின் கண் எளிமை யன்று. என்பதற்காகத் தான் குரு இலிங்க அடியார் வழிபாடுகளில் ஒன்றை உறுதியாகக் கொண்டொழுகும் வழியாக மேற் கூறிய செருக்கற்ற நிலையில் இறைவன் காட்சி யருளிய தன்மையைப் பெரியபுராணம், பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடற்புராணம் ஆகியவற்றின் சாரங்களாக வலியுறுத்தா நிற்கின்றன என்பதும் செருக்கறுகின்ற நிலை எய்தியுளதைத் தொண்டர் (தாம்) உணராமலே தானே வந்து எய்தி மனமற்ற முடிவிலே உலகினர் கொண்டாட வெளிப்படுத்துவது இறைவனின் திருஉளப் பாங்காகும் என்பதும் அறிஞர் ஆவார் உணர்ந்த உண்மைப் பொருள்களாகத் திகழ்கின்றன என்றல் உண்மையே யன்றி உயர்வு நவிற்சி யாகாது. (இவற்றால் உறுதியாக ஒன்றைக் கடைப் பிடிக்கின் அதன் வழியாக நல் நிலை எய்தும் என்பது கருத்து.) மனமற்ற இடமே இறைவன் விளங்கும் இடம் என்க. கட+உள் (மனத்தைத் தாண்டுதல்) என்ற சொல்லின் பொருளாகவே விளக்கியிருத்தலையும் உணரலாம்.

உலகின்பங்களை விட்டு மனம் ஒன்றி இறைவனடியில் வீற்றிருந்ததாற் பய னென்ன என்று கேட்பார்க்கும் ஒன்றும் அற்றது, சூனியம் என்றும் புகல்வார்க்கும் தெளிவு படுத்துவார் போன்று நாவுக்கரசர்,

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே'

என்ற அமிர்த மொழியால் பகைமையாய்ச் செய்யுந் துன்பமும் உண்மை அறிவாளர்க்கு (மெய்ஞ்ஞானிகளுக்கு) இன்பம் பயக்கும் ஆற்றல் உடையது எனத் தெள்ளிதின் உணர அருளியுள்ளார்.

இறைவனே குருவாக வருவர் எப்போது?

இருவினையும், ஒத்து வருங்காலம் உளவாகிப்—பெத்த
மலபரி பாகம் வரு மளவிற் பன்னுள்
அலமருதல் கண்ணுற் றருளி—உலவாது
அறிவுக் கறிவாகி யவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்த நிலைநீங்கிப்—பிறியாக்
கருணை திரு வுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபர னென் றோர் திருப்பேர் கொண்டு—திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி உடல் அறுபத் தெட்டுநிலம்
... ...
சர்வநியா யிற்கும் தனிச் சுடரே'

எனக் குமரகுருபர அடிகளும்,

'பிணக் கிலாத பெருந் துறைப் பெருமான்..........
வினை யொத்தபின் கணக் கிலாத் திருக்கோலம் நீ வந்து
காட்டினுய் கழுக் குன்றிலே'

என மணிவாசகப் பெருந்தகையாரும், இருவினை யொப்பு மலபரிபாகம் வந்த பின்னர் கடவுள் குருவாக வெளிப்படுவர் என்ற உண்மையுணர்ந்து உண்மை யன்புடன் ஒருமைப் பட்டுழைப்பின் உண்மை யின்பம் அடைவர் என்பது திண்ணம்.

மலர் மிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

(64 ஆம் பக்கம் தொடர்ச்சி.)

இத் திருச்சிலம் பொலி காலந் தாழ்த்து சேரமானுக்குக் கேட்டது சுந்தரரின் எம் முறை சிதம்பர தரிசனத்தின்போது இருக்கும்? தில்லைக்குள்ள இவரது ஒரே பதிகம் 'மடித்தாடும் அடிமை.........' என்பதாகும். இது இரண்டா முறை தரிசித்த போது பாடியது.

'.........பேரூரில் கண்ட நிலை சிறப்பித்துத் தனிக் கூத் தென்று நடிப்பானை நாமனமே பெற்றவா றெனுங் களிப்பா னயந்து பாடி.........' (ஏயர்கோன் புராணம், 115) எனப் பட்டுள்ளதால், ஒரு சமயம் இப் பாடல் தான் (மடித்தாடும் அடிமை) சேரமானுக்கு திருச் சிலம் பொலி கேட்காமல் தடை செய்திருக்க வேண்டும். மற்ற இரு (முதல், மூன்று) முறையில் பாடிய பதிகங்கள் இல்லை. பாடியன மறைந்து இருக்கவேண்டும்.

இவ்வாறு இவர் சேரமானுக்குத் திருச் சிலம் பொலி கேட்கத் தடை செய்த தில்லைத் தரிசனம் மூன்று முறையாகவே இருப்பி னும் அதன் பின் இவர் செய்த யாத்திரையின் அளவாவது :—

தில்லையினின்றும் திருநாவலூர் வழியே திருக் காளத்தி வரை சென்று திரும்பி வழியில் திருஒற்றியூரில் சங்கிலியாரை மணந்து இருந்து பின் கண் இழந்து ஆரூர் வந்துள்ளார். (ஏயர்கோன் புராணம், 192-302)

பின் திருப்புன்கூர் சென்று ஏயர்கோன் கலிக்காமரை நட்பு கொண்டு மீண்டுள்ளார் (ஏயர்கோன் புராணம், 395-407)

பின் நாகைக்காரோணம் சென்று பரிசுகள் பெற்று மீண்டுள்ளார்.

இவ்வாறு இல் வாழ்க்கையின் சிறந்த பெரும் பகுதியைச் சேரமான் திருஅஞ்சைக் களத்தில் இருந்து தில்லை வழியாய் ஆரூர் வருவதன் முன் (கழறிற்றறிவார் புராணம், 46-62) கழித் துள்ளார் எனில், இவர் எவ்வளவு விரைவுடன் யாத்திரைகளை யுங் காதல் வாழ்க்கையையும் நடத்தியிருக்க வேண்டு மென்பது புலனாகின்றது.

இதனால் சுந்தரரது யாத்திரை, வாழ்க்கை முதலியன இவரது 15-இல் இருந்து 18 வயதுக்குள் அதாவது மூன்றாண்டு கால அளவிற்குள், முடிவுற்றிருக்கும் என்னும் முடிவைப் பற்றி ஐயுற வேண்டியதில்லை.

மதிப்புரை.

முத்தி நிச்சயப் பேருரை (மாபாடியம்): தருமபுர ஆதினப் பெரு வெளியீடு. இது இவ் வாதீன முதற் குரவரான **குருஞான சம்பந்த பரமாச்சாரிய** சுவாமிகள் இயற்றிய 23 வெண்பாக்களாலான சிறு நூலுக்கு இவ் வாதீனப் பழம் பெரும் புலவராய **வெள்ளியம்பலவாணத் தம்பிரான்** சுவாமிகள் இயற்றிய பேருரை ஆகும். (308 பக்கம்.) இது அரிய ஆசிரியர் வரலாறுகள், வியந்து வியந்து, உவந் துவந் தெழுதிய ஆராய்ச்சிக் குறிப்பு (33 பக்.) அகராதிகள் (42 பக்.) உடைய அழகிய பதிப்பு ஆகும்.

நூல் வெளியீட்டில் இணையற்ற இவ் வாதீனம் நூற்றுக் கணக்கான சிறு நூல்களை வெளியிட்டு அடைந்த பயனிலும், இப் பெரு நூல் ஒன்றைப் பதிப்பித்துப் பெற்றுள்ள புகழ் புண்ணியம் நிலைத்ததும் சிறந்ததும் ஆகும் என்பதில் ஐயமில்லை. இது தமிழில் வெளிவந்துள்ள **இரண்டாவது பேருரை** யாகுமாதலின், இதனால் தமிழ் மொழியின் சிறப்பும், அறிவாளர்களின் மகிழ்ச்சியும் மிகப் பெரிதாகின்றன. இந் நூல் வெளிவரற்கு உழைத்துள்ள அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள், சுவாமிநாத பண்டிதர், முத்துத் தாண்டவராய பிள்ளை, இலக்கணம் முத்துக்குமரசாமித் தம்பிரான் சுவாமிகள், தண்டபாணி தேசிகர் முதலிய பேரன்பர்களுக்குத் தமிழ் சைவ உலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளன. இவ் வாதீனத்தவர்கள் இப்பொழுதாவது (1946-ல்) தங்கள் பெருங் கடமைகளுட் சிறிதாவது செய்து முடித்ததற்கு இவ்வரிய 'கருமமே கட்டளைக் கல்'லாகும். இப்பொழுது பட்டத்திலுள்ள மகாசந்நிதானம் இதனைப் பெரும் பகுதி முடித்து வெளியிடும் பேறு பெற்றது போல் 'திருவாரூர்' 'சிதம்பரம்', திருக் கோவில்களைப் பற்றிய அரிய பெரிய நூல்களையும் வெளியிட்டுப் பெரும் புகழ் படைத்துளது என்பதை மறக்கலாகாது. அருஞ் சைவத் தமிழ்ப் புலவர்கள் அருகி வருகின்ற இக் காலத்தில் எஞ்சியுள்ளவர்களையாவது சிறப்பாக ஆதரித்தும், ஊக்குவித்தும் இவ் வாதீனத்துப் பெருஞ் செல்வமாகிய 'ஞானாவரண விளக்கம்' எனும் சித்தியார் பேருரையையும், உச்சி மேற் புலவர் கொள் சித்தாந்த நன்னூல்களையும் விரைவில் வெளியிடும் பேறும் புகழும் பெருவாழ்வும் இவ் வாதீனத்திற்கே வாய்க்குமாறு வழுத்துவோமாக.

இப் பதிப்பு எத்துணையோ வகையில் சிறந்து விளங்குவதை விளக்கப் பக்கம் பக்கமாக எழுதக்கூடுமேனும் பின் வரவேண்டிய நூல்களின் முன்னேற்றங் கருதியும் இதனைப் பயில்வோர்க்கு விளக்கக் கருதியும் சில குறிப்புகள் கொடுக்கக் கூடும். இதன் நீளம், அகலம், அட்டை முதலியவற்றைப் படிப்போர் கையாளுதற்கும், நூல் நிலையங்களில் வைத்து எடுப்பதற்கும் இன்னும் எளிதாகுமாறு அமைத்தல் நன்றாகும். பக்க எண்கள் (முகவுரை தவிர) மும் முறை திருப்பித் திருப்பி ஒரே ஆங்கில மயமாய் வருதலால் தேடுவோர் திகைப்படையாதிருக்க வரலாறு முதலியன தமிழெண்ணாகவும், அகராதிகள் உரோம எண்களாகவும் போட்டிருக்கக் கூடும். மேற்கோள் நூல் அகராதி, மேற்கோள் முதற்குறிப் பகராதியின் முன்னிருப்பதே பொருத்த முடையதாகும். கேள்விக் குறி(?) வாக்கிய மையத்தில் வருவது முறையாகாது (நூலாராய்ச்சிக் குறிப்பு-பக். 23, வரி 34 முதலியன பார்க்க.) ஆன்மானந்த வாதியைக் குறிப்பதற்கு 'ஆன்மா' எனும் முழுச் சொல் சுருக்கமாகாது; 'ஆன்.' என்பதே மரபாகும் (ஷை 14, 15, 16 பக். பார்.) கூறியது கூறலைக் குறைத்தல் பயனில சொல்லாமைக்கு ஒத்ததாகும்; ஷை பக் 10, வரி 34 முதல் பக். 11, ஷை வரி 11 வரை வருவதே ஷை பக். 24, வரி 33 லிருந்து வரி 38 வரையிலும், நூலினுள்ளும் (பக். 67, 68 ல்) வருதலின் முந்திய விடங்களில் சுருங்கக் கூறல் சாலும். 'நூலாராய்ச்சி'யில் நூல் நுதலிய பொருளைக் குறிக்குங் கால் இரண்டொரு விடங்களில் வரு மிடம் கொடுத்திருப்பது போல எல்லா விடங்களிலும் கொடுத்தல் சிறப்பாகும். இந்நூலில் 49 தமிழ் நூல்களிலிருந்து 500 க்கு மேம்பட்ட மேற்கோள்கள் தரப் பட்டிருப்பதுடன் 53 வடநூல்களிலிருந்து 1000க்கு மேம்பட்ட மேற்கோள்கள் விரவி வருதலால், வடமொழி யறியாதாருக்கும் பயன்படும்படி பிந்தியவற்றின் மொழி பெயர்ப்பையாவது பெய்திருக்கலாம்; ஒத்த தமிழ் மேற்கோள்களையுங் காட்டுதல் கூடுமாயின் பெருஞ் சிறப்புடைய தாகும்.

இந் நூல் 'பரமானந்தப் பழங் கடல் இதுவே' எனக் காட்டவல்லதாதலானும், இவ் வுரை கற்போருக்கு நல்விருந்தாகுமாதலானும், இப் பதிப்பு தமிழ்த் தாய்க்குத் தலை சிறந்த அணிகளுள் ஒன்றாகும் என்பது ஒருதலை.

தமிழ் மணி. சாமி. வேலாயுதம் பிள்ளை.

புலவர்
உயர்திரு. அ. பொன்னண்ணுக் களத்தில் வென்ருர்
படத்திறப்பு விழா.

நம் புலவர் களத்தில் வென்ருர் அவர்கள் தமது செங்கரை யூரில் தொடங்கிச் சிறப்பாக நடாத்தி வரும் திருவள்ளுவர் கழக ஆண்டு விழாவில், (5—6—51) அன்பர்கள் வள்ளுவர் பெருமான் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்ததுடன், நம் புலவர் படத்தினையும் திறந்து வைத்தனர். இவ் விழாச் செயல்கள், உயர் திருவாளர்கள் தே. ஜான் கார்டன் இராசரெத்தினக் களத்தில் வென்ருர், S. A. முத்தையா B. A., வித்துவான் திருநாவுக் கரசர் முதலிய பேரன்பர்கள் பெரு முயற்சிகளால் மிகச் சிறப்பாக நடைபெற்றன. உயர் திருவாளர். இராவ்சாகிப் S. சுயம்பிரகாசம் அவர்கள் தலைமை தாங்கித் திரு. களத்தில் வென்ருர் அவர்கள் படத்தினைத் திறந்து வைத்தனர். திருச்சிராப்பள்ளி நாட்டாண்மைக் கழகத் தலைவர் உயர்திரு P. B. K. இராசா. சிதம்பரம் செட்டி யார் (வள்ளுவர் பெருமான் திருப்படத் திறப்பாளர்) புலவர் அ. நடேச முதலியார் T. M. பாஸ்கரத் தொண்ட மான் M. A., ஆகியோர் தலைமைகளில் படத்திறப்புக்கள் விரிவுரைகள் நிகழ்ந்தன. உயர் திருவாளர்கள் வித்துவான்கள். அழகப்பர், கோ. சாமிநாதர், V. அரங்க சாமியார், முத்துக் கருப்பர், அரசப்பர், வடிவேற் பிள்ளை. கோதண்டபாணி மூவரை யர் முதலியோர்களும் வந்தருளி அன்புரை அமுதங்கள் பொழிந்தனர். கரந்தைக் கவியரசர் பாடிய செய்யுட்களில் ஒன்ரும்,

கல்லாத கலைகள் உண்டோ! கலந்துலவாக் கலைஞர் உண்டோ!
செல்லாமல் அவைகள் உண்டோ! சேர்த்திமிகு யோகம் தன்னில்
இல்லாத நிலையும் உண்டோ! நீதிநெறி நீக்கல் உண்டோ!
எல்லாரும் இவரை என்றும் ஏத்துபுகழ்க் கெல்லை உண்டோ!

என்ருங்கு, நம், தமிழ் நாட்டு வாழ்வாகிய களத்தில் வென்ருர் அவர்களைத் தமிழுலகம் பாராட்டுங் கூட்டங்களில், இஃது ஒன்ருகச் சிறந்தது. வாழியர்!